சகல பரிசுத்தவான்களின் ஆலயம்

27/27-B, புறவழிச்சாலை, காளவாசல், மதுரை - 625 016.



திருச்சபை மலர்

ஏப்ரல் – ஜுன் 2026

குருவானவர்கள்:

Rev. G. ஆன்றோ ஜெபஸ்
99528 85804

Rev. K. ஜெபசிங் செல்வராஜா
99528 93805

Rev. R. ஜெயசீலன்
80123 31151

கௌரவ செயலர்:
திரு. S. ஜெசுதாஸ் ஜேக்கப் மோன்ராஜ்
98421 90933

கௌரவ பொருளாளர்:
திரு. Z. வில்லியம் பால்ராஜ்
97918 30175

கௌரவ சொத்து பாதுகாவலர்:
திரு. W. வின்ஸ்டன் டேனியல்
98657 59890

மலர் குழு:
Rev. ஜெனிபா ஜெபஸ்
திருமதி. டயனா ஜெபசிங்
திருமதி. ஹேனா ஜெயசீலன்
திரு. ஜோனத்தான் சாமுவேல்
Dr. சோபியா ஜோனத்தான்
திருமதி. மஞ்சுளா மனோகரன்
திருமதி. ரீட்டா ஞானஜோதி
திரு. பாபு முத்துராமலிங்கம்
Dr. G.S.R. எமில் செல்வன்

இந்த இதழில்

1.	குருவானவர் செய்தி	2
2.	செயலரின் கடிதம்	5
3.	பாடல் பிறந்த கதை	8
4.	சிறுவர் பகுதி	10
5.	வாலிபர் பகுதி	11
6.	பெண்கள் பகுதி	13
7.	ஆண்கள் பகுதி	14
8.	மிஷனெரி பணித்தள குறிப்புகள்	15
9.	நாம் தாங்கும் மிஷனெரி	16
10.	உலகளாவிய திருச்சபை வரலாறு	17
11.	இந்தியாவிற்கு கிறிஸ்தவத்தின் பங்களிப்பு	19
12.	மிஷனெரி வரலாறு	21
13.	தேவாலய வரலாறு	23
14.	அவசரம்	24
15.	கடுகளவு விசுவாசம்	25
16.	ஆதாம் முதல் நோவா வரை – வயதினை அறிவோம்	26
17.	கர்த்தருக்கு பிரியமானது எது ?	29
18.	நமது கிளை ஆலய செய்திகள்	31
19.	மருத்துவ கதை	34
20.	மனன வசனம்	35
21.	மைக்கேல் அசரியா தேர்வு பகுதி	36
22.	வேத வினா	37
23.	குறுக்கெழுத்து புதிர்	40
24.	வண்ணம் தீட்டுதல்	43

குருத்துவ ஊழியம்: கிறிஸ்துவுக்கான நற்கந்தம்



“இரட்சிக்கப்படுகிறவர்களுக்குள்ளேயும், கெட்டுப் போகிறவர் களுக்குள்ளேயும், நாங்கள் தேவனுக்குக் கிறிஸ்துவின் நற்கந்தமாயிருக்கிறோம்.” 2 கொரிந்தியர் 2 : 15

குருத்துவப் பணி என்பது மனிதரால் ஏற்படுத்தப்பட்டதல்ல. அது இறைவனால் வனாந்திர வழியில் தேவன் தாம் தெரிந்துகொண்ட மக்களினம் நன்னெறி கட்டுப்பாட்டுடன் காக்கப்படும்படி உண்டாக்கப்பட்டது. பத்துக் கட்டளைகளை, வாழ்நாளெல்லாம் கடைப்பிடித்து, அதற்காக ஏற்படுத்தப் பட்ட பிரத்தியேகமான இறைவனின் பிரசன்னத்தின் அடையாளமாகிய ஆசரிப்புக் கூடாரமும், ஒழுக்க நெறியற்ற மனிதகுலம் சீரழிந்து விடாதபடி ஆண்டவரின் பேரருளால், நிலைநிறுத்தப்பட்டிருப்பதே குருத்துவ ஊழியமாகும்.

இந்தக் குருத்துவ ஊழியம் என்பது அன்றும் சரி, இன்றும் சரி எளிதான பணி அல்ல. திருமறை எத்தனை நிலையில் குருத்துவ ஊழியத்தை வரையறை செய்கிறது என்பதை இப்போது காண்போம். பவுல் அடிகளாரின் பார்வைகளில் குருத்துவ ஊழியம் என்பது நற்கந்தம் என்னும் வாசனைத் திரவியத்துடன் ஒப்பிட்டுக் கூறப்படுகிறது. குருத்துவப் பணியைச் செய்யும் ஊழியன் கீழ்க்காணும் வரையறைகளுக்குள் இருந்து செயல்படுகிறான் என்பதை விளங்கக் காண்போம்.

I. வெற்றியாளன் என்னும் நற்கந்தம் (2 கொரி. 2:14)

"கிறிஸ்துவுக்குள் எப்பொழுதும் எங்களை வெற்றி சிறக்கப்பண்ணி, எல்லா இடங்களிலேயும் எங்களைக்கொண்டு அவரை அறிகிற அறிவின் வாசனையை வெளிப்படுத்துகிற தேவனுக்கு ஸ்தோத்திரம்."

குருத்துவப்பணி என்பது கிறிஸ்துவுக்குள் வெற்றியாளர்களாகவும், பிறரை வெற்றிக்கு நேராக நடத்துபவர்களாகவும் செயல்படுகின்ற ஒன்று. ஏனெனில் இவர்களை வெற்றி சிறக்கப்பண்ணுவதே தேவ திட்டமாக இருக்கின்றது. இத்தகைய வெற்றியாளர்களே குடும்பத்திலும், சபையிலும், சமூகத்திலும் வெற்றி வாகை சூடும் நபர்களாக உருவாக்க முடியும்.

குருத்துவ இறைப்பணி என்பது வெற்றியாளர்களை உருவாக்குவது என்று பார்த்தோம். ஆம், பிரியமானவர்களே, பாவத்தினாலும், பிரச்சனைகளின் போராட்டங்களாலும் தொடர்ந்து தங்கள் வாழ்வில் தோல்வியை எதிர்கொள்வதால் சோர்ந்து போனவர்கள் அநேகர். தற்கொலை செய்துகொண்டு இவ்வுலக வாழ்வில் இருந்து விடுபட துடிக்கும் எண்ணத்துடன் நடை பிணமாக அலைந்து கொண்டிருப்பவரும் பலர். இப்படிப்பட்ட மக்களை மீண்டும் நம்பிக்கையுடன் வாழவும் நம்பிக்கையின் தேவனிடம் நடத்தும் பணியை செய்பவர் எவரும் குருத்துவ பணி செய்வோரே. மட்டுமின்றி, குருத்துவப் பணியாளனாகிய வெற்றியாளன் தன்னில்தானே வெற்றியாளனாகவும் இருக்கிறான். அதோடு கிறிஸ்துவாகிய அவரது நற்செய்தி என்னும் அறிவின் வாசனையையும் வெளிப்படுத்து கிறவனாகவும் இருக்கிறான். இதற்காகவே நாம் தேவனுடைய நற்கந்தமாகத் தெரிந்து கொள்ளப்பட்டிருக்கிறோம்..

II. மத்தியஸ்தன் என்னும் நற்கந்தம் (யாத். 29 :10)

"அப்பொழுது ஆரோனும் அவன் குமாரரும் தங்கள் கைகளைக் காளையினுடைய தலையின்மேல் வைக்கக்கடவர்கள்."

குருத்துவப் பணியை வேதம் வேறு ஒரு வகையிலும் நமக்குக் காண்பிக்கிறது. என்னவென்றால், குருத்துவப் பணியானது மத்தியஸ்த ஊழியம் என்பதாகும். தேவனுக்கும், மனிதனுக்கும் இடையிலான மத்தியஸ்தப் பணி. ஆசரிப்புக் கூடார காலத்தில் மனிதன் தன் பாவத்தின் நிமித்தம் தேவசந்நிதியில் சேர முடியாதவனாக இருந்தான். மனிதன் தன் பாவத்திற்கான நிவாரணத்தை பலியாகச் செலுத்திய பின்னரே தேவனுடன் ஒப்புரவாக முடியும். அந்த ஒப்புரவுக்கான ஊழியத்தை நிறைவேற்று

-வதற்காகவே ஆசாரியனும் அவன் குமாரரும் பலிப் பொருளின் மேல் கை வைத்து, அந்தப் பாவத்தின் அகோரத்தில் அவர்களும் பங்கெடுக்கிறார்கள். இந்த ஒப்புரவுக்கான ஊழியத்தை நமது ஆண்டவர் இயேசு கிறிஸ்து சிலுவையில் நிறைவேற்றினார்.

எபேசியர் 2:16 *பகையைச் சிலுவையினால் கொன்று, அதினாலே இருதிறத்தாரையும் ஒரே சரீரமாகத் தேவனுக்கு ஒப்புரவாக்கினார்.* சிலுவைக்குப் பகைஞராயிருந்து இன்னும் இயேசுவின் அன்புக்குத் தூரமாயிருப்போர் அநேகர். அத்தகையோர் தேவனுடன் ஒப்புரவு காண கிறிஸ்துவின் மரணத்தில் இணைவதற்கான மத்தியஸ்தம் செய்யும் சுவிசேஷமாகிய நற்கந்தமாக இருந்து செயல்படும் செயல் வீரர்கள் எவரும் அவருடைய நற்கந்தமாக நறுமணம் வீசுபவரே.

III. வேலையாட்கள் என்னும் நற்கந்தம் (லூக்கா 10 : 2)

"அப்பொழுது அவர் அவர்களை நோக்கி: அறுப்பு மிகுதி, வேலையாட்களோ கொஞ்சம்; ஆகையால் அறுப்புக்கு எஜமான் தமது அறுப்புக்கு வேலையாட்களை அனுப்பும்படி அவரை வேண்டிக் கொள்ளுங்கள்."

நாம் கிறிஸ்துவின் இராஜ்ஜியத்தின் பணிக்கென்று அவரது திருச்சபைத் தோட்டத்தின் பணியாளர்களாய் இருக்கிறோம் என்பது இன்னொரு நற்கந்த வாசனைக் கொப்பானதாகும். இவ்வுலகம் கதிர் முற்றி விளைந்திருக்கும் நல்ல விளைச்சல் நிலத்துக்கு ஒப்பானது. அந்த விளைச்சலை நல்ல முறையில் அறுத்துக் களத்தில் சேர்க்கும் உன்னதப் பணியை, அதாவது ஆத்தும ஆதாயப் பணியைச் செய்வதற்கான வேலையாட்களே கிறிஸ்துவை அறிவிக்கும் பணியாளர்கள். அப்பணியைச் செய்ய அவருடைய பிள்ளைகளால் பரவும் நற்கந்த வாசனை என்று இதை வேதம் பறைசாற்றுகிறது.

இந்த அழிவுக்கேதுவான ஆத்துமாக்களின் மீட்பைத்தான் பவுல் அப்போஸ்தலன், "இரட்சிக்கப்படுகிறவர்களுக்குள்ளே ஜீவ வாசனையாக நாங்கள் இருக்கிறோம்" என்கிறார். ஆம், பிரியமானவர்களே, மரணமும் ஜீவனும் நமக்கு முன்பாக வைக்கப்பட்டுள்ளது. இதில் நாம் எத்தகைய நற்கந்தமாக, அதாவது வாழ்வுக்கு நேரான ஜீவ வாசனையாகவா, அல்லது மரணத்துக்கு ஏதுவான மரண வாசனையாகவா இருக்கப்போகிறோம்.?

Rev. K. ஜெபசிங் செல்வராஜா
சபை குருவானவர்

அதின் செட்டைகளின் கீழ் ஆரோக்கியம் இருக்கும்.

செயலரின்  கடிதம்....

"கர்த்தர் செய்த நன்மைகளை எண்ணிப் பார்ப்போம்!"

அன்பான திருச்சபையாருக்கு,

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள்.

ஆண்டவருடைய அளவற்ற கிருபையினாலும் உங்கள் அனைவரின் ஜெபத்தினாலும் ஒத்துழைப்பினாலும் நமது சகல பரிசுத்தவான்களின் ஆலயத்தின் மூலம் பல்வேறு ஆவிக்குரிய ஊழியங்களையும், ஆலய வளர்ச்சிப் பணிகளையும் சிறப்பாக மேற்கொண்டு வருகிறோம். இவற்றின் மூலம் ஆண்டவருடைய நாமம் மகிமைப்படுவதாக.

இந்த ஆண்டின் முக்கிய ஊழியங்களில் ஒன்றாக, விடுமுறை வேதாகமப் பள்ளி (VBS-26) ஊழியங்கள் நமது ஆலயத்திலும், நமது கிளைச் சபைகளான அச்சம்பத்து, கீழச்சிண்ணனம்பட்டி மற்றும் விராலிபட்டி ஆகிய இடங்களிலும் சிறப்பாக நடைபெற்றது. இவற்றில் சுமார் 660 சிறுவர்கள் சிறுமியர் ஆர்வமுடன் கலந்து கொண்டு வேத வசனங்களைக் கற்று இயேசுவை அறியும் அறிவில் வளர்ச்சியை பெற்றனர்.

இந்த VBS ஊழியங்களின் இயக்குனர்களாக திருநெல்வேலி பாலியர் நேசனை சேர்ந்த ஊழியர்களும், நமது ஆலயத்தை சேர்ந்த திருமதி. ஹேனா ஜெயசீலன், திருமதி. பெல்சி, செல்வி. தில்பர் புஷ்பிதா மற்றும் திரு. இளையராஜா அவர்களும் குடும்பமாக இணைந்து அர்ப்பணிப்புடன் பணியாற்றி, இவ்வூழியங்கள் ஆசீர்வாதமாக நடைபெற உறுதுணையாக இருந்தனர். குழந்தைகளுக்கான வேதாகமப் பாடங்கள், கதைகள், பாடல்கள், கைவினைப் பயிற்சிகள் மற்றும் பல்வேறு ஆக்கப்பூர்வமான செயல்பாடுகள் மூலம் நற்செய்தி எடுத்துரைக்கப்பட்டது. இவ்வூழியத்தில் தங்களை இணைத்து பணியாற்றிய போதகர்கள், இயக்குனர்கள், ஆசிரியர்கள், ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் அனைத்து தன்னார்வலர்கள் அனைவருக்கும் என் மனமார்ந்த பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மிஷனெரிகளை தாங்குவதில் முன்னோடியாக திகழும் நமது திருச்சபையில், மாதம் ஒரு மிஷனெரி என்ற தீர்மானத்தின்படி, கடந்த மாதங்களில் மிஷனெரி அர்ப்பணிப்பு ஆராதனைகள் CGMM, FMPB மற்றும் IEM ஊழியங்களில் சுவிசேஷப் பணிக்காக தங்களை அர்ப்பணித்த ஊழியர்களின் அனுபவ சாட்சிகளோடு நடைபெற்றது. இவ்வூழியர்களையும், ஊழியங்களையும் தொடர்ந்து ஜெபத்தின் மூலம் தாங்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

தேவனுடைய சமூகத்தை நோக்கிக் செஞ்சுங்கள்.

இவ்வருடத்தின் தரிசனப்படி, நமது ஆலயத்தின் சார்பாக வடஇந்திய ஜார்கண்ட் மாநிலத்திலுள்ள யெகோவா ரஃபா மிஷனெரி இயக்கத்தைச் சார்ந்த சாகிப் கஞ்ச் மாவட்டத்திலுள்ள சுச்சி கிராம பணித்தளத்தில் புதிய ஆலய திறப்பு விழா 12.04.2026 அன்று நடத்தப்பட்டது. இதில் நமது ஆலய குருவானவர் Rev. ஆன்றோ ஜெபஸ் அவர்கள் மற்றும் திருச்சபைச் செயலர் பங்குபெற்று தேவநாம மகிமைக்காக புதிய ஆலய பிரதிஷ்டை ஆராதனையில் கலந்து கொண்டது மட்டுமின்றி ஜார்க்கண்ட் மாநிலம், பர்கூர் மாவட்டம், பாண்டு கிராமத்தில் MIM இயக்கத்தின் மூலமாக மால்டோ ஆதிவாசி இனமக்களுக்காக கட்டப்பட்டு வருகிற ஆலயத்தையும் பார்வையிட்டு, அம்மக்களுடன் ஐக்கியப்பட்டு நற்செய்தி பணியில் பங்கு பெற்று ஜெபித்து வந்தனர். இவ்வூழியத்தின் மூலம் அநேகரை தமது ராஜ்யத்திற்குள் வழிநடத்த ஆண்டவர் கிருபை செய்வாராக.

நமது குருவானவர் Rev. ஜெயசீலன் அவர்கள் மற்றும் இணைச் செயலர் திரு. பிரபாகர் மில்டன் அவர்களும் கடந்த 28-4-26 அன்று ராஜஸ்தான் மாநிலத்திலுள்ள காலியா மாவட்டத்தில் சாலோம் மிஷன் இயக்கத்தில் நமது ஆலயத்தின் சார்பாக கட்டப்படவுள்ள புதிய ஆலயத்திற்கான அஸ்திபாரமிடும் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு, விசுவாசிகளோடு இணைந்து ஆலய கட்டுமானப் பணிக்காக ஜெபித்து வந்தார்கள். இவ்வாலயங்களின் மூலம் அப்பகுதியில் தேவராஜ்யம் கட்டப்படவும், ஊழியம் விரிவடையவும், அப்பகுதியில் அநேகருக்கு ஆசீர்வாதத்தின் மையமாக விளங்கவும் நாம் தொடர்ந்து ஜெபிப்போம்.

கடந்த 26.06.26 மற்றும் 27.06.26 ஆகிய தினங்களில் நமது ஆலயத்தின் அனைத்து குழுக்களும் இணைந்து, மிஷனெரி பணித்தள விஜயமாக தாளவாடியிலுள்ள Mission India Movement (MIM) பணித்தளத்திற்கு சென்று, அங்குள்ள ஊழியர்களுடன் இணைந்து ஊழியங்களை நேரில் கண்டும் ஊழியங்களில் பங்கு பெற்றும், அவர்களை ஜெபத்தோடு உற்சாகப்படுத்தியும் வந்தது மிகவும் ஆசீர்வாதமான அனுபவமாக அமைந்தது. இந்த பயணம் மிஷனெரிப் பணியின் அவசியத்தையும், தேவைகளையும் உணரச்செய்து, அனைவரின் இதயங்களிலும் அர்ப்பணிப்பை உருவாக்குவதாக அமைந்தது.

இந்த ஆண்டின் பொதுத்தேர்வுகளில் (10-ம் மற்றும் 12-ம் வகுப்பு) வெற்றி பெற்ற நமது ஆலயத்தைச் சார்ந்த அனைத்து மாணவ, மாணவியருக்கும் அவர்களுடைய கடின உழைப்பையும், சிறப்பான சாதனையையும் பாராட்டும் விதமாக பரிசுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். அவர்களுடைய எதிர்காலக் கல்வி மற்றும் வாழ்க்கைப் பயணத்தில் ஆண்டவர்தாமே கூட இருந்து வழிநடத்தி மென்மேலும் உயர்த்துவாராக. தேவனுடைய அளவற்ற

நான் உங்களைச் சிநேகித்தேன்.

கிருபையால், கடந்த மே 17-ம் தேதி மாலை ஆராதனை ஆங்கில ஆராதனையாக நடத்தப்பட்டது. நமது ஆலயத்தின் புதிய முயற்சியாகத் தொடங்கப்பட்ட இந்த ஆராதனை, ஆங்கிலத்தில் தேவனை ஆராதிக்கவும், அவரது வார்த்தையை அறிந்து கொள்ள விரும்பும் அனைவருக்கும் ஒரு சிறந்த வாய்ப்பாகவும் ஆசீர்வாதமாகவும் இருந்தது.

நமது ஆலய ஆண், பெண் வாலிபர் ஐக்கியங்களின் சார்பாக ஒருநாள் இளைஞர் தியானக் கூடுகை நமது ஆலயத்தில் 14.06.26 அன்று சிறப்பாக நடைபெற்றது. இதில் சென்னையைச் சேர்ந்த ஜுபிலி மெமோரியல் வேதாகமக் கல்லூரி பேராசிரியர் மற்றும் வேதம் கற்போம் Youtube Channelன் ஸ்தாபகரான திரு. ஜான்ஃபிரெட்ரிக் டேவிட் அவர்கள் தேவனுடைய வார்த்தையைப் பகிர்ந்து, வாலிபர் தேவனோடு நெருங்கி வாழ்வதின் மூலம் கிறிஸ்துவுக்கு சாட்சிகளாக திகழ வேண்டியதின் அவசியத்தை வலியுறுத்தினார். இக்கூடுகை நம் வாலிபப் பிள்ளைகளின் ஆவிக்குரிய வளர்ச்சியில் புதிய உற்சாகத்தை ஏற்படுத்தியது.

கடந்த மே மாதத்தில் விராலிப்பட்டியிலுள்ள நமது கிளைச் சபையின் ஆலய அசன ஆராதனையும், அதைத்தொடர்ந்து அசன விருந்தும் ஆசீர்வாதமாக நடைபெற்றது. இதில் அநேக விசுவாசிகள் பங்குபெற்று, தேவனை ஆராதித்து அசனவிருந்தில் ஐக்கியப்பட்டனர். இந்நிகழ்ச்சி, நமது கிளைச்சபையின் வளர்ச்சிக்காக ஒன்றிணைந்து செயல்பட வேண்டியதின் அவசியத்தையும் முக்கியத்துவத்தையும் உணர்த்துவதாக அமைந்தது. இதை சிறப்பாக நடத்திய ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் பங்குபெற்ற அனைவருக்கும் பாராட்டுக்களையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வனைத்து செயல்பாடுகளும், ஆண்டவருடைய கிருபையினாலும், திருச்சபையாரின் ஜெபம் மற்றும் உற்சாகமான பங்களிப்பினாலும் சிறப்பாக நடைபெற்றன. இனிவரும் நாட்களிலும் நாம் ஒன்றிணைந்து ஆண்டவருடைய ஊழியப் பணிகளிலும், வரவிருக்கும் அறுப்பின் பண்டிகை நிகழ்வுகளிலும் குடும்பமாக உற்சாகத்தோடு கலந்து கொண்டு ஆண்டவரின் நாமத்தை மகிமைப் படுத்துவோமாக.

I கொரிந்தியர் 15 : 58ன் படி, நாம் கர்த்தருக்குள் படுகிற பிரயாசம் விருதாவாயிராதென்று அறிந்து, கர்த்தருடைய கிரியையிலே எப்பொழுதும் பெருகுகிறவர்களாய் இருப்போமாக.

ஆண்டவர்தாமே நம் அனைவரோடும் இருந்து நம்மை வழிநடத்தி ஆசீர்வதிப்பாராக.

இப்படிக்கு,

திரு. **S. ஜெசுதாஸ் ஜேக்கப் மோன்ராஜ்**

திருச்சபைச் செயலர்,

நீங்கள் வேண்டிக் கொள்ளுகிறதற்கு முன்னமே உங்களுக்கு இன்னது தேவை என்று அவர் அறிந்திருக்கிறார்.

பாடல் பிறந்த கதை

ராகம் : ஆல்பர்ட் லிஸ்டர்பீஸ்

அன்பே விடாமல் சேர்த்துக் கொண்டீர்
(O love that will not let me go)

பாடல் : ஜார்ஜ் மதீசன்

1. அன்பே விடாமல் சேர்த்துக் கொண்டீர்
சோர்ந்த என் நெஞ்சம் உம்மில் ஆறும்
தந்தேன் என் ஜீவன் நீரே தந்தீர்
பிரவாக அன்பில் பாய்ந்தென்றும்
ஜீவாறாய்ப் பெருகும்

2. ஜோதி என் ஆயுள் முற்றும் நீரே
வைத்தேன் உம்மில் என் மங்கும் தீபம்
நீர் மூட்டுவீர் உம் ஜோதியாலே
பேர் ஒளிக்கதிரால் உள்ளம்
மேன் மேலும் ஸ்வாலிக்கும்

3. பேரின்பம் நோவில் என்னைத் தேடும்
என் உள்ளம் உந்தன் வீடே என்றும்
கார்மேகத்திலும் வான ஜோதி
விடியுங்காலை களிப்பாம்
உம் வாக்கு மெய் மெய்யே

4. குருசே என் வீரம் திடன் நீயே
உந்தன் பாதம் வீட்டென்றும் நீங்கேன்
வீண்மாயை யாவும் குப்பை நீத்தேன்
விண் மேனியாய் நித்திய ஜீவன்
வளர்ந்து செழிக்கும்.

இப்பாடலை எழுதியவர் ஜார்ஜ் மதீசன் ஆவார். சிறுவயதிலேயே கண்பார்வை குறைவுபட்ட மதிசனுக்கு மருத்துவமனையில் சரியான சிகிச்சை அளிக்காததால் தனது 18வது வயதில் பார்வையை இழந்தார். இக்குறைபாட்டுடன் கிளாஸ்கோ பல்கலைகழகத்தில் சிறந்த மாணவனாகத் தேறி தனது 19வது வயதிலேயே பட்டம் பெற்றார்.

இது என் ஜனமென்று நான் சொல்லுவேன்.

1866ம் ஆண்டு தனது 24-ம் வயதில் உதவி குருவானவராக பொறுப்பேற்று பின் இரண்டு ஆண்டுகளில் இனெல்லம் என்ற இடத்திலுள்ள சிற்றாலயத்தில் போதகரானார். அங்கு 18 ஆண்டுகள் திறமையாக பணியாற்றி “சிறந்த பிரசங்கியார்” என்ற மதிப்பும் பாராட்டும் பெற்றார். திருமறை கட்டுரைகள் பல எழுதி திருச்சபை மக்களின் அன்பையும் பேராதரவையும் பெற்றார். இங்கிலாந்தின் விக்டோரியா மகாராணி அவரை தன் அரண்மனை ஆலயத்திற்கு செய்தி வழங்க வரவழைத்தார். அவரது செய்தியால் ராணியும் புத்துணர்வு பெற்றார்.

1882-ம் ஆண்டு ஜூன் மாதம் ஆறாம் தேதி ஜார்ஜ் மதீசன் சகோதரிக்கு கிளாஸ்கோவில் திருமணம் நடைபெற்றது. எனவே, அவர்களது உறவினர்கள் அனைவரும் அங்கே தங்கியிருக்க, இவர் மட்டும் தனித்து விடப்பட்டவராக தனிமையில் இருந்தார். அப்போது தான் அவருக்கும் மிகவும் துயரமாக இருந்தது. தனிமை மிகவும் அவரை வாட்டியது. மிகவும் சஞ்சலப்பட்டு, நோயுற்ற மனநிலையில் தனித்து விடப்பட்ட அந்த சூழல்தான் அவரை இப்பாடல் எழுத காரணமாக அமைந்தது. அவரது உள்ளத்தில் பேசிய குரல் வார்த்தைகளை சொல்ல சொல்ல அப்படியே துரிதமாக, ஒரு தாளில் எழுதினார். பாடல் முழுவதையும் எழுதி முடிக்க மொத்தம் 5 நிமிடங்கள் மட்டுமே செலவாயின.

பொங்கி வரும் நீரூற்றைப் போல தன் உள்ளத்தில் கொடுக்கப்பட்ட இப்பாடல் தனிப் பொலிவுடன் அமைந்திருந்தது. இப்பாடலுக்கு 1885-ம் ஆண்டு ஸ்காட்லாந்தை சேர்ந்த டாக்டர் ஆல்பர்ட் லிஸ்டர் பீஸ் - ராகம் அமைத்தார்.

திரு. **B. ஜோனத்தான் சாமுவேல்**
Choir Master

நான் அவர்கள் விண்ணப்பத்தைக் கேட்பேன்.

சிறுவர் பகுதி

"தேவன் சிறியவர்களையும் பயன்படுத்துவார்"

Heollo Kutties ! ***நான் சிறிய பணிப்பெண் பேசுகிறேன் . . .***

என் பெயர் வேதாகமத்தில் சொல்லப்படவில்லை. எல்லோரும் என்னை **"சிறிய பணிப்பெண்"** என்று அழைக்கிறார்கள். நான் ஒரு பெரிய மனிதர் இல்லை. நான் ஒரு அரசி இல்லை. நான் ஒரு வீராங்கனையும் இல்லை. நான் ஒரு சாதாரண சிறுமி.

ஆனால் தேவன் என்னைப் பயன்படுத்தி ஒரு பெரிய அதிசயம் செய்தார்! அது எப்படி தெரியுமா?

நான் இஸ்ரவேல் நாட்டில் வாழ்ந்தேன். ஒரு நாள் எதிரி படையினர் என்னைப் பிடித்து வேறு நாட்டிற்கு அழைத்துச் சென்றார்கள். அங்கே நான் நாகமான் என்ற படைத்தலைவரின் வீட்டில் வேலை செய்தேன். நாகமான் மிகவும் துணிச்சலான வீரர். ஆனால் அவருக்கு ஒரு பெரிய பிரச்சனை இருந்தது. அவருக்கு ஒரு மோசமான தோல் நோய் இருந்தது. அவரும் அவரது குடும்பத்தாரும் மிகவும் கவலையாக இருந்தார்கள். அதைப் பார்த்தபோது எனக்கு வருத்தமாக இருந்தது. நான் அவர்களை வெறுக்கவில்லை. அவர்களுக்கு உதவ வேண்டும் என்று நினைத்தேன். ஒரு நாள் நாகமானின் மனைவியிடம் நான் சொன்னேன்.

"எங்கள் நாட்டில் எலிசா என்ற தேவனுடைய தீர்க்கதரிசி இருக்கிறார். நாகமான் அவரிடம் சென்றால் குணமடைவார்."

அவர்கள் என் வார்த்தையை நம்பினார்கள். நாகமான் எலிசாவைச் சந்திக்கப் போனார். எலிசா அவரிடம் **"யோர்தான் ஆற்றில் ஏழு முறை குளியுங்கள்"** என்றார். முதலில் நாகமான் கோபப்பட்டார். ஆனால் பிறகு அவர் கீழ்ப்படிந்தார். அவர் ஆற்றில் ஏழு முறை குளித்தார். அப்போது என்ன நடந்தது தெரியுமா?

தேவன் அவரை முழுமையாக குணப்படுத்தினார்!

நாகமான் மிகவும் மகிழ்ந்தார். அவருடைய குடும்பமும் மகிழ்ந்தது. அன்று நான் ஒரு பெரிய விஷயத்தைக் கற்றுக் கொண்டேன்.

ஒரு சிறிய பெண் கூட தேவனால் பெரிய காரியங்களுக்கு பயன்படுத்தப்படலாம்!

என் கதையிலிருந்து நீங்கள் கற்க வேண்டிய 3 விஷயங்கள்

1. ***எல்லோரிடமும் அன்பாக இருங்கள்***
   நாகமான் என் நாட்டைச் சேர்ந்தவர் இல்லை. ஆனால் நான் அவருக்கு உதவ விரும்பினேன். நாமும் எல்லோரிடமும் அன்பாக இருக்க வேண்டும்.
2. ***மற்றவர்களுக்கு உதவுங்கள்***
   நான் தெரிந்த நல்ல செய்தியை நாகமானிடம் சொன்னேன். அதனால் அவரது வாழ்க்கை மாறியது. நாமும் உதவி தேவைப்படுபவர்களுக்கு உதவலாம்.
3. ***சிறியவர்களையும் தேவன் பயன்படுத்துவார்***
   நான் ஒரு சிறிய பெண். ஆனால் தேவன் என்னைப் பயன்படுத்தி ஒரு பெரிய அதிசயம் செய்தார். நீங்களும் தேவனுக்கு மிகவும் முக்கியமானவர்கள்.

நினைவுக்குறிப்பு வசனம்

"ஒருவருக்கொருவர் அன்பாயிருங்கள்" எபேசியர் 4 : 32

சிறிய பணிப்பெண்ணின் சவால்

எல்லோரிடமும் அன்பாக இருங்கள்
உதவி தேவைப்படுபவர்களுக்கு உதவுங்கள்
நல்ல செய்தியை மற்றவர்களிடம் சொல்லுங்கள்
"நான் சிறியவன் / சிறியவள்" என்று நினைக்காதீர்கள்
தேவன் உங்களையும் பெரிய காரியங்களுக்கு பயன்படுத்த முடியும்!

அன்புடன்: **உங்கள் சிறிய தோழி**

கர்த்தர் என் தேவன் என்று அவர்கள் சொல்லுவார்கள்.

ஞானமே முக்கியம்!

இயேசப்பாவின் இன்ப நாமத்தில் உங்களுக்கு என் அன்பின் நல்வாழ்த்துக்கள்! ஞானத்தைக் குறித்து உங்களுடனேகூட பகிர்ந்துகொள்ள ஆசைப்படுகிறேன்.

"ஞானமே முக்கியம், ஞானத்தைச் சம்பாதி; என்னத்தைச் சம்பாதித்தாலும் புத்தியைச் சம்பாதித்துக்கொள்." நீதி. 4:7

நாம் இந்த உலக வாழ்க்கையிலே எதைச் சம்பாதித்தாலும், சம்பாதிக்காவிட்டாலும், ஞானத்தையும், புத்தியையும் கட்டாயம் சம்பாதிக்க வேண்டும் என்று சொல்லி வேதம் வலியுறுத்துகிறது.

ஞானம்: ஆண்டவருக்குப் பயப்படுவதே ஞானம் (யோபு 28:28)
புத்தி : பொல்லாப்பைவிட்டு விலகுவதே புத்தி (யோபு 28:28)

★ ஆண்டவருக்குப் பயந்து அவருடைய வார்த்தையின்படி வாழ்வது ஞானம் ஆகும். (Application)

★ புத்தி என்பது பகுத்தறியும் திறன், இருதயத்தின் ஆழமான புரிந்துகொள்ளுதல். (Understanding)

இந்த இரண்டும் இந்த வாலிபப்பிராயத்தில் இருக்கும்போது நீங்கள் சிறந்த ஒரு வாழ்க்கை வாழ முடியும்.

ஞானத்தின் முக்கியத்துவம் :

★ முத்துக்களைப் பார்க்கிலும் விலையேறப் பெற்றது (நீதி. 3:15)
★ பொன் வெள்ளியினால் உண்டாகும் லாபத்தைவிட மேலானது (நீதி. 3:14)
★ உலக செல்வங்களைவிட மேலானது (நீதி. 16:16)

ஞானத்தின் ஆசீர்வாதங்கள் : நீதி. 3:13 – 26

★ ஞானத்தையும் புத்தியையும் கண்டடைகிறவர்கள் பாக்கியவான்கள்.
★ தீர்க்காயுசையும், செல்வத்தையும் பெற்றுக்கொள்ள முடியும்.
★ நம்முடைய வழிகள் இனிதாகவும், பாதைகள் சமாதானமாகவும் இருக்கும்.
★ நமக்கு அது ஜீவவிருட்சம் போல் இருக்கிறது.
★ நம்முடைய வழிகளில் பயம் இருக்காது.
★ நம்முடைய கால் இடறாது, தேவையற்ற பாவ காரியங்களில் சிக்கிக் கொள்ளாது.
★ ஞானமுள்ளவன் பெலமுள்ளவன். (நீதி. 24:5)
★ ஞானவான்கள் கனத்தைச் சுதந்தரிப்பார்கள். (நீதி. 3:35)
★ ஞானவான்கள் ஆகாய மண்டலங்களிலுள்ள ஒளியைப் போல பிரகாசிப்பார்கள். (தானி. 12:3)

கர்த்தர் எருசலேமின் குடிகளைக் காப்பாற்றுவார்.

இந்த ஞானத்தை பெற்றுக்கொள்வது எப்படி?

1 கொரி. 10 : 4 – கிறிஸ்துவே ஞானக்கன்மலை

நீதி. 2 : 6 – கர்த்தர் ஞானத்தைத் தருகிறார்; அவர் வாயினின்று அறிவும் புத்தியும் வரும்.

யாக். 1 : 5 – உங்களில் ஒருவன் ஞானத்தில் குறைவுள்ளவனாயிருந்தால் . . . .
தேவனிடத்தில் கேட்கக்கடவன் அப்பொழுது அவனுக்குக் கொடுக்கப்படும்.

கர்த்தர் ஒருவரே ஞானத்தைத் தருகிறவர். ஞானக்கன்மலையாகிய கிறிஸ்துவினிடத்தில் நாம் கேட்கும்போது கட்டாயமாக நமக்கு வேண்டிய ஞானத்தைத் தருகிறார்.

வேதாகமத்தில் கர்த்தரிடத்தில் ஞானத்தைப் பெற்றுக்கொண்டவர்கள் :

பெசலெயேல் - விநோதமான வேலைகளைச் செய்யும்படி கர்த்தர் அவனுக்கு ஞானத்தையும், புத்தியையும், அறிவையும் அருளினார். (யாத் 35 : 33)

சாலொமோன் - ஜனங்களை நியாயம் விசாரிக்கவும், நன்மை தீமை இன்னதென்று வகையறுக்கவும் அவனுக்கு ஞானமுள்ள இருதயத்தை கர்த்தர் தந்தருளினார். (1 இரா. 3 : 9-14)

தானியேல் - சகல ஞானத்திலும் தேறினவன் (தானி. 1 : 3-6)

நாம் ஞானமுள்ளவர்களாக மாற வேண்டுமென்றால் மூடரைக் குறித்து அறிந்துகொள்வது அவசியம். அவர்களைக் குறித்து வேதம் பின்வருமாறு கூறுகிறது:

நீதி. 18 : 7 - மூடனுடைய வாய் அவனுக்குக் கேடு, அவன் உதடுகள் அவன் ஆத்துமாவுக்கு கண்ணி.

நீதி. 13 : 19 - தீமையை விட்டு விலகாதவன்

நீதி. 10 : 1 - தாய்க்குச் சஞ்சலமானவன்

நீங்கள் ஞானவான்களாய் வாழ விரும்புகிறீர்களா? அல்லது மூடனைப் போல சஞ்சலத்தைக் கொடுக்கக்கூடிய, தனக்கே கேடு வருவித்துக்கொள்ளக்கூடிய வாழ்க்கை வாழ விரும்புகிறீர்களா?

அன்பு தம்பி, தங்கச்சி! நீங்கள் ஞானமுள்ளவர்களாய் வாழ வேண்டும். அதைத்தான் வேதம் நமக்கு வலியுறுத்துகிறது. இந்த வாலிபப் பிராயத்தில் நமக்கு வரும் சவால்களைக் கையாள, நம்முடைய கால் பாவ காரியங்களில் சிக்கிக்கொள்ளாமல் பரிசுத்த ஜீவியம் செய்ய, நமக்கு கொடுக்கப்பட்டிருக்கிற பொறுப்புகளை தனித்துவம் வாய்ந்ததாய் திறம்பட செய்ய ஞானத்தின் ஊற்றாகிய அவரிடத்தில் ஞானத்தைப் பெற்றுக்கொள்வோம். அப்பொழுது நம்முடைய பாதைகள் இனிதானதாகவும், சமாதானமுள்ளவைகளாகவும் மாறும்.

கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக !

வாலிபப் பெண்கள் ஒருங்கிணைப்பாளர்
திருமதி. **டயனா ஜெபசிங்**

நான் அவர்களைக் கர்த்தருக்குள் பலப்படுத்துவேன்.

பெண்கள் பகுதி

ஆகார்

ஆகாரின் தாய், தந்தையர் அவர்களுடைய வறுமையினிமித்தம் எகிப்து மன்னருக்கு அவளை அடிமையாக விற்றனர். ஆபிரகாம் எகிப்திற்கு சென்றபோது சாராளை தன் சகோதரி என்று சொன்னதினிமித்தம் பார்வோனுடைய பிரபுக்கள் சாராளை அரண்மனைக்கு அழைத்து சென்றனர். ஆபிரகாம் சாராளின் அண்ணன் என்று நினைத்து அவனை வசப்படுத்த பார்வோன் ஆபிரகாமுக்கு அநேக ஆடு, மாடுகளும், கழுதைகளும், வேலைக்காரரும், வேலைக்காரிகளும், ஒட்டகங்களும் வெகுமதியாக கொடுத்தான். ஆனால் கர்த்தர் பார்வோனையும் அவன் வீட்டாரையும் மகாவாதைகளால் வாதித்தார். இதனால் பார்வோன் ஆபிரகாமையும் அவன் மனைவியையும் அவனுக்கு உண்டான எல்லாவற்றையும் அனுப்பி விட்டான். அதில் வந்த வேலைக்காரிகளில் ஆகாரும் ஒருத்தி. (ஆதி 12 10-20)

<u>கர்த்தருடைய தூதனானவரின் சந்திப்பு:-</u>

ஆகார் கர்ப்பவதியாய் இருக்கும் போது தன் எஜமானியை (சாராளை) விட்டு வனாந்தரத்திற்கு ஓடிப் போனாள். அங்கே கர்த்தருடைய தூதன் ஆகாரை சந்தித்து அவளை ஆசீர்வதித்து அவளுடைய சந்ததி எப்படி இருக்கும் என்ற கூறினார். அந்த இடத்திலே ஆகார் கர்த்தருக்கு நீர் என்னை காண்கிற தேவன் என்று பெயரிட்டாள் (ஆதி 16 : 13), வேதாகமத்தில் அநேக தேவ மனிதர்கள் கர்த்தர் தங்களுடன் பேசின இடத்திற்கு பெயரிட்டுள்ளனர். ஆனால் முதன் முதலில் 'என்னை காண்கிற தேவன்' என்று தேவனுக்கே பெயரிட்ட பெண் ஆகார் மட்டுமே. அடிமையான ஆகார் கர்த்தரை பற்றி ஆபிரகாமிடமிருந்து தான் அறிந்திருக்க வேண்டும். ஆகார் கர்த்தரிடம் வைத்த அன்பை கண்டு இரண்டு முறை தேவன் அவளை நேரடியாக சந்தித்து அவளுக்கு வாக்கு கொடுத்து தேற்றினார். ஆகார் கர்த்தரை அவ்வளவாய் ருசித்திருந்தபடியால் தான் தன்னை சந்தித்த கர்த்தருக்கே பெயரிட்டு அவரை மகிமைப்படுத்தினாள்.

ஆகார் தேவனை அறியாத ஒரு புறஜாதியாக இருந்த போதும் அவளுடைய நெருக்கத்தில் கர்த்தரை தனக்கு துணையாக கொண்டு தேவனை தரிசித்தாள். அதன் மூலம் அவளுடைய அன்பை ருசித்தாள். நாமும் தேவனை அறிந்தால் மட்டும் போதாது. ஆகாரை போல் அவரை ஒவ்வொரு நொடியும் ருசிக்க வேண்டும்.

Rev. **ஜெனிபா ஜெபஸ்**
பொறுப்பாளர், பெண்கள் ஐக்கிய சங்கம்

அவர்கள் இருதயம் கர்த்தருக்குள் களிகூரும்.

ஆண்கள் பகுதி

தேவனின் மகிமையை வடிவமைத்த “பெசலெயேல்”

வேதாகமத்தில் இடம் பெற்றுள்ள பெசலெயேல் யூதா கோத்திரத்தை சார்ந்தவர். அவர் ஊரியின் மகனும் ஊருவின் பேரனும் ஆவார். யாத்திராகமம் 31 : 2.

இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்திலிருந்து விடுவிக்கப்பட்டு வனாந்தரத்தில் பிரயாணம் செய்துகொண்டு இருந்த வேளையில், தேவன் மோசேயின் மூலம் ஆசரிப்புக் கூடாரம், அதன் பணிமுட்டுகளை உருவாக்க கட்டளையிட்டபோது, அந்த மகத்தான, உன்னதமான தேவபணியை நிறைவேற்றுவதற்காக தெரிந்து கொள்ளப்பட்ட தேவ ஆவியினால் நிரப்பப்பட்டவர்தான் இந்த பெசலெயேல்.

விநோதமான வேலைகளை அவன் யோசித்துச் செய்கிறதற்கும், பொன்னிலும், வெள்ளியிலும், வெண்கலத்திலும் வேலை செய்கிறதற்கும், இரத்தினங்களை முத்திரை வெட்டாக வெட்டிப் பதிக்கிறதற்கும், மரத்தில் சித்திரவேலைகளைச் செய்கிறதிலும் மற்றும் சகலவித வேலைகளையும் யூகித்துச் செய்கிறதற்கு வேண்டிய ஞானமும், புத்தியும், அறிவும் உண்டாக்க அவனை தேவ ஆவியினால் கர்த்தர் நிரப்பினார். பெசலெயேல், உடன் ஒத்தாசையாகப் பணிபுரிய தான் கோத்திரத்திலுள்ள அகிசாமாவின் குமாரனாகிய அகோலியாபையும், ஞானமுள்ள இருதயமுள்ள சிலரையும் ஆண்டவர் எழுப்பினார்.

பெசலெயேல் மற்றும் அவருடன் பணிபுரிந்தோர் ஆசரிப்புக் கூடாரம், சாட்சிப் பெட்டி, கிருபாசனம், சகலபணிமுட்டுகள், மேஜை, சுத்தமான குத்துவிளக்கு, சகலகருவிகள் தூபபீடம், தகனபலிபீடம், தொட்டி, ஆராதனை வஸ்திரங்கள், பரிசுத்த வஸ்திரங்கள், அபிஷேகதைலம், சுகந்தவர்க்கங்களாகிய தூபவர்க்கத்தையும் செய்தனர்.

இவரைப்போலவே நாமும் தேவ அனுக்கிரகத்துடன், ஆண்டவரின் ஆவியினால் நிரப்பப்பட்டு, நமக்களிக்கப்பட்டுள்ள உலகப்பிரகாரமான, சமுதாயக் காரியம், ஆவிக்குரிய காரியங்களை யூகித்துச் செய்து ஆண்டவரின் நாமத்தை மகிமைப்படுத்துவோமாக.

நாமும், நமக்களிக்கப்பட்ட திறமையை தேவநாம மகிமைக்காகப் பயன்படுத்துவோமாக. பரிசுத்த ஆவியானவர், நமது பணிகளில் இடைபடும்போது, அது பரிசுத்தமான பணியாகிறது. தேவனுக்காகச் செய்யும் வேலை சிறந்ததாக இருக்க மிகுந்த கவனம், நேர்த்தியுடனும் செய்ய வேண்டும். தேவதிட்டத்திற்கு முழு கீழ்ப்படிதலுடன், தேவன் காட்டிய மாதிரியின்படி செய்ய வேண்டும். தேவன் நமது திறமையைப் பார்க்கிறார். அதை யாருக்காகப் பயன்படுத்துகிறோம் என்பதே முக்கியமானது. பெசலெயேலைப் போல நாமும் நமது திறமைகளை ஆண்டவரின் நாம மகிமைக்காகச் செயல்படுத்துவோமாக. ஆமென்

Mr. பிரபாகர் மில்டன், செயலர், ஆண்கள் ஐக்கிய சங்கம்.

அவர்களைத் திரும்ப நிலைக்கப்பண்ணுவேன்.

மிஷனெரி பணித்தள குறிப்புகள்

1. பணித்தளம் - **Ghoshpukur (BYM)**

மிஷனெரி பெயர் - **Mrs. எபினேசர் தினகரன்**

மிஷனெரியை தாங்குபவர் - **திரு. ஜோனத்தான் சாமுவேல்**

ஜெபியுங்கள்: 7 இடங்களில் V.B.S. மூலமாக சிறுவர் ஊழியங்கள் நடைபெற்றது. அந்த சிறுவர்கள் ஆவிக்குரிய வாழ்க்கையில் வளரவும், தொடர்ந்து அவர்களுக்கு ஞாயிறுபள்ளி நடத்தப்படவும் ஜெபியுங்கள்.

2. பணித்தளம் - **குராய் (G.M.M.)**

மிஷனெரி பெயர் - **ஹீராலால் மாராவி**

மிஷனெரியை தாங்குபவர் - **திரு. சாம் சுரேஷ்**

ஜெபியுங்கள்: மிஷனெரி ஊழியங்கள் விரிவாகவும், விசுவாசிகளின் ஆவிக்குரிய வளர்ச்சிக்காகவும், எழுப்புதல் ஏற்படவும் ஜெபியுங்கள்.

3. பணித்தளம் - **(ICGM) திருப்பூர், தமிழ்நாடு.**

மிஷனெரி பெயர் - **G. பால்துரை**

மிஷனெரியை தாங்குபவர் - **திரு. சித்ர சிங்**

சாட்சி : ஜீவா என்ற சகோதரிக்கு வீடு கட்ட முடியாமல் 6 ஆண்டுகள் தடையாக இருந்தது. விசுவாசிகள் சேர்ந்து ஜெபித்தோம். கர்த்தர் ஜெபத்தைக் கேட்டார். (விசுவாசித்தால் தேவனுடைய மகிமையைக் காண்பாய் என்ற வசனத்தை சொல்லி ஜெபித்தார்கள்). கர்த்தர் அனைவரின் விசுவாசத்தையும் கண்டு, வீட்டைக் கட்டி முடிக்க கிருபை செய்தார். ஆமென்.

திருமதி. **ராணி வில்சன்**
மிஷனெரி பொருளாளர்

நான் அவர்களுடைய தேவனாகிய கர்த்தர்.

நாம் தாங்கும் மிஷனெரி

நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்.
மாற்கு 16 : 15

மிஷனெரி பெயர் :
திருமதி. ஸ்டெல்லா ஜாஸ்மின்

கணவர் பெயர் :
திரு. ஜெ. டேவிட் ஜேக்கப்

பிள்ளைகள் :
1. செல்வன் ஜூடா
2. செல்வி ஐடா

பணித்தளம் : **சேத்தூர், சிவகங்கை மாவட்டம், தமிழ்நாடு.**

மிஷனெரி இயக்கம் : **திருச்சபை வளர்ச்சி மிஷனெரி இயக்கம்.**

தாங்குபவர் : **திரு. Z. வில்லியம் பால்ராஜ்**

ஜெப குறிப்புகள் :

1. சேத்தூர் பணித்தள ஆலயத்தில் ஆழ்குழாய் அமைக்க ஜெபிப்போம்.
2. சபைக்கு வருகிறவர்கள் விசுவாசத்தில் நிலைத்திருக்க ஜெபிப்போம்.

Rev. K. ஜெபசிங் செல்வராஜா
Dr. சோபியா ஜோனத்தான்

அவர்கள் பட்சத்தில் கர்த்தர் காணப்படுவார்.

உலகளாவிய திருச்சபை வரலாறு

உபத்திரவகால திருச்சபை

(கிபி 100 – 313 வரை யோவானின் மரணம் முதல் கான்ஸ்ன்டன் டைன் பிரகடனம் வரை)

ராஜாங்க உபத்திரவங்கள்

இரண்டாம் மூன்றாம் நூற்றாண்டில் சபையானது ரோமராயர்களால் உபத்திரவத்திற்குள்ளாயிற்று என்பதை சபை சரித்திரத்தின் வாயிலாக அறிந்து கொள்ளுகிறோம். இந்த உபத்திரமும் கி.பி. 313 வரை நீடித்தது.

ரோமராயர்கள் ஏன் சபையை உபத்திரவப்படுத்தினர்?

1. பிறமார்க்கங்களும், அஞ்ஞான மார்க்கங்களும் புதிய தெய்வ வணக்கத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கவில்லை. காரணம் அவர்கள் ஆயிரக்கணக்கான தெய்வங்களை வழிபட்டனர். இன்னும் ஒரு புதிய தெய்வத்தை வணங்க வேண்டும். ஆனாலும் அவர்களுக்கு அது பிரச்சனை இல்லை. ஆனால் கிறிஸ்தவம் இயேசு கிறிஸ்துவை தவிர வேறு எந்த தெய்வத்திற்கும், விக்கிரக ஆராதனைக்கும், ஆவிகளின் வணக்கத்திற்கும் முக்கியத்துவம் கொடுக்கவும் இல்லை; ஏற்றுக் கொள்ளவும் இல்லை. எனவே சபை உபத்திரவமாக்கப்பட்டது.

2. விக்கிரக ஆராதனையானது வாழ்க்கையோடு பின்னிப்பிணைந்து காணப்பட்டது. ஒவ்வொரு வீட்டிலும் விக்கிரகங்கள் இருந்தன. ஒவ்வொரு பண்டிகையின் போதும், விசேஷ நிகழ்ச்சியின் போதும் அரசாங்க அலுவலகங்கள் நடத்தும் முன்பும் எதை செய்தாலும் விக்கிரகங்களுக்கு பலியிட்டு தூபம் காட்டி வணங்கினர். கிறிஸ்தவர்கள் அப்படி செய்யாததினால் “சமூகவிரோதிகள்” என கருதப்பட்டனர்.

3. ராயன் வணக்கம்; ராயனின் மீது விசுவாசம் உள்ளவர்கள் என்று சோதிக்க, முக்கிய பட்டணங்களிலும், இடங்களிலும் ராயனுடைய சிலையை வைத்து வணங்கினர். தூபம் காட்டப்பட்டது. கிறிஸ்தவர்கள் இதை வணங்க மறுத்தனர். எனவே இவர்கள் ராயனுக்கு விரோதமாக புரட்சி செய்பவர்கள் புரட்சி தூண்டுபவர்கள் என கருதப்பட்டு உபத்திரவப்படுத்தப்பட்டனர்.

4. யூத மார்க்கம் அரசாங்கத்தில் அங்கீகரிக்கப்பட்ட மார்க்கமாக இருந்தது. கிறிஸ்தவத்தை அதன் உட்பிரிவு என கருதியபடியினால் அதற்கு பாதுகாப்பு

இருந்தது. கி.பி. 70 ல் எருசலேம் அழிக்கப்பட்ட பின் யூத மார்க்கம் அழிந்தது எனவே கிறிஸ்தவர்கள் தனித்தே நிற்க வேண்டிய சூழ்நிலையும், சட்டரீதியான பாதுகாப்பும் அவர்களுக்கு இல்லாமல் போய்விட்டது. எனவே உபத்திரவப் படுத்தப்பட்டனர்.

5. ரகசிய கூட்டங்கள் அவர்களுக்கு சந்தோஷத்தை உண்டு பண்ணியது. சூரியன் உதிக்கும் முன்பே அல்லது மறைந்த பின்பு இவர்கள் ரகசியமாக குகைகளிலும், மறைவிடங்களிலும், பூமியின் கீழும் கூடி ஆராதனை செய்தார்கள். இவர்களை குறித்த தவறான தகவல்கள் கொடுக்கப்பட்டன. சதி திட்டம் தீட்டுபவர்கள் எனவும், ராயனுக்கு உண்மையற்றவர்கள் எனவும் சொல்லப்பட்டது. திருவிருந்தின் போது வெளி ஆட்கள் உள்ளே நுழைய முடியாது. இது மற்றவர்களுக்கு சந்தேகத்தை உண்டு பண்ணியது..

6. சபையில் சமத்துவம்: கிறிஸ்தவத்தில் எல்லா மனிதர்களும் சமநிலை வகித்தனர். ஆராதனையில் எல்லாரும் ஒன்றே. ஒரே சபையில் அடிமை கண்காணியாக இருக்கலாம். ஒரு பிரபு சாதாரண விசுவாசியாக இருக்கலாம். இது அரச குலத்தை சேர்ந்தவர்களுக்கு அருவருப்பாக இருந்தது. கிறிஸ்தவர்கள் சமுதாய ஒழுங்கை சீர்குலைப்பவர்கள் என உபத்திரவப்படுத்தப்பட்டனர்.

7. வியாபார ஆர்வம் விக்கிரகத்தை செய்து விற்பதினால் நல்ல ஆதாயமிருந்தது. விக்கிரகத் தொழில் ஆதாயம் கிறிஸ்தவத்தினால் அற்றுப் போயிற்று. அப்போஸ்தலர் 19 : 27

இரண்டாம் மூன்றாம் நூற்றாண்டுகளிலும், நான்காம் நூற்றாண்டின் ஆரம்ப வருடங்கள் வரை கிறிஸ்தவம் தடை செய்யப்பட்ட மார்க்கமாகவும், கிறிஸ்தவர்கள் சட்ட ரீதியான பாதுகாப்பிற்கு அப்பாற்பட்டவர்களாகவும் கருதப்பட்டனர். இக்காலங்களில் பல கடுமையான உபத்திரவங்கள் அவ்வப்போது எழும்பி சபையை பாதித்தது. அவ்வாறு ஏற்பட்ட உபத்திரவங்கள் எந்தெந்த ராயனுடைய காலத்தில் நடந்தது என்பதை அடுத்த தொடரில் காண்போம்.

Rev. G. ஜெனிபா ஜெபஸ்

இந்தியாவில் கிறிஸ்தவத்தின் பங்களிப்பு

“பார்வையற்றோரின் பெரியம்மா”
மிஸ் அனி ஜேன் ஆஸ்க்வித் (1851–1919)

தென்னிந்தியாவில் திருநெல்வேலிப் பகுதியில் கல்விப் பணியிலும், சமூக சேவையிலும் கிறிஸ்தவ மிஷனெரிகளின் பங்களிப்பு அளப்பரியது. அதில் தனித்துவம் வாய்ந்த ஒரு மைல்கல், பாளையங்கோட்டையில் பார்வையற்றோருக்காகத் தொடங்கப்பட்ட பள்ளியாகும். இந்தப் பணியின் பின்னணியில் ஒரு தாயுள்ளத்தோடு செயல்பட்டவர் மிஸ் அனி ஜேன் ஆஸ்க்வித். ‘பார்வையற்றோரின் பெரியம்மா’ என்று அன்போடு அழைக்கப்பட்ட இவரது அர்ப்பணிப்புமிக்க வரலாறு நமக்கு இன்றும் மெய்சிலிர்க்க வைக்கின்றது.

இந்திய வருகையும் ஆரம்பப் பணியும்:

இங்கிலாந்தின் சி.எம்.எஸ். (Church Missionary Society) அமைப்பினால் அனுப்பப்பட்ட அனி ஜேன் ஆஸ்க்வித், 1881–ஆம் ஆண்டு நவம்பர் 26–ம் தேதி பாளையங்கோட்டைக்கு வந்தடைந்தார். தொடக்கத்தில் சாரா டக்கர் நிறுவனத்தில் மிஷனெரியாகப் பணியாற்றினார். அவரது முயற்சியால் அந்த நிறுவனம் ஒரு உயர்நிலைப் பள்ளியாகவும், பின்னர் கல்லூரியாகவும் தரம் உயர்த்தப்பட்டது.

பணியின் திருப்புமுனை – சுப்பு என்னும் சிறுவன்:

ஒரு நாள் தனது வீட்டு வாசலில் பிச்சை கேட்டு நின்ற ‘சுப்பு’ என்ற பார்வையற்ற சிறுவனை ஆஸ்க்வித் சந்தித்தார். “பிச்சை எடுப்பதைத் தவிர உன்னால் வேறென்ன செய்ய முடியும்?” என்று அவர் கேட்டபோது, உழைத்து வாழும் உணர்வை அவனுக்குள் விதைத்தார். அவனை ஒரு ‘புங்காவாலா’ வாக (விசிறி இழுப்பவர்) வேலையில் அமர்த்தி, உழைப்புக்கான ஊதியத்தை வழங்கினார். இந்தச் சிறிய தொடக்கமே தென்னிந்தியாவில் பார்வையற்றோர் கல்விக்கான விதையாக அமைந்தது.

கல்வி முறை மற்றும் ‘மூன்’ எழுத்துமுறை (Moon's Type):

பார்வையற்றோர் தொடுதல் மூலம் வாசிப்பதைக் கண்டறிந்த ஆஸ்க்வித், அவர்களுக்குத் தமிழ் மொழியில் கல்வி புகட்ட விரும்பினார். 1888–இல் இங்கிலாந்து சென்றிருந்தபோது, டாக்டர் வில்லியம் மூன் என்பவரைச் சந்தித்து, அவர் உருவாக்கிய ‘மூன் எழுத்துமுறையை’க் கற்றார். 1889–இல் இந்தியா திரும்பியபோது, தமிழ் உயிர் மற்றும் மெய் எழுத்துக்களுக்கான மூன் குறியீடுகளுடன் பாடப்புத்தகங்களைத் தயாரித்து வந்தார். சுப்பு (ஞானஸ்நானத்திற்குப் பின் ‘தேவப்பிரியம்’) இந்தப் புதிய முறையில் முதன்முதலாகப் படித்துத் தேறினான். இவரே இப்பள்ளியின் முதல் பார்வையற்ற ஆசிரியருமாவார்.

பள்ளியின் வளர்ச்சி (1890 – 1910):

- **1890:** பாளையங்கோட்டையில் பார்வையற்றோருக்கான முறையான பள்ளி வகுப்புகள் தொடங்கின. ஆரம்பத்தில் சிறுவர்களுக்கு மட்டுமே இருந்த இப்பள்ளியில், 'ஆவுடையம்மாள்' (கிருபைப்பேட்டாள்) என்ற சிறுமி முதல் மாணவியாகச் சேர்ந்ததன் மூலம் சிறுமிகளுக்கான பிரிவும் தொடங்கியது.
- **1893 :** பண்ணைவிளையில் மூன்றாவது பள்ளி தொடங்கப்பட்டது.
- **1908:** மாணவர் எண்ணிக்கை அதிகரித்ததால், பாளையங்கோடையில் 12 ஏக்கர் நிலம் வாங்கப்பட்டு புதிய வளாகத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டது.
- **தொழிற்கல்வி:** மாணவர்கள் சுயமாக உழைத்து வாழ வேண்டும் என்பதற்காகப் பாய் நெய்தல், பருத்தி ஆடை நெய்தல், நாற்காலிகள் பின்னுதல் போன்ற தொழிற்பயிற்சிகள் வழங்கப்பட்டன.

பிரெய்லி முறையின் அறிமுகம் (1912) :

தொடக்கத்தில் மூன் எழுத்துமுறை பயன்படுத்தப்பட்டாலும், அது கைகளால் எழுத கடினமாக இருந்தது. எனவே, 1912–ஆம் ஆண்டு ஆஸ்க்வித் அவர்கள் 'பிரெய்லி' (Braille) முறையை அறிமுகப்படுத்தினார். தமிழ் மொழிக்கேற்ப பிரெய்லி குறியீடுகளை அமைத்து, பார்வையற்ற மாணவர்கள் தாங்களாகவே எழுதவும் படிக்கவும் வழிவகை செய்தார்.

அரசின் அங்கீகாரமும் கௌரவமும் :

மிஸ் ஆஸ்க்வித்தின் தன்னலமற்ற சேவையைப் பாராட்டி, சென்னை அரசு அவருக்கு 1907–ஆம் ஆண்டு புத்தாண்டு தினத்தில் 'கைசர்–இ–ஹிந்த்' (Kaiser-I-Hind) வெண்கலப் பதக்கத்தை வழங்கி கௌரவித்தது, பல மாவட்ட ஆட்சியர்களும், ஆளுநர்களும் இவரது பள்ளிக்கு வருகை தந்து பாராட்டியுள்ளனர்.

இறுதிப் பயணமும் மறைவும் :

சுமார் 38 ஆண்டுகள் இந்தியாவில் பணியாற்றிய மிஸ் ஆஸ்க்வித், உடல்நலக் குறைவு காரணமாக 1918–ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் இங்கிலாந்து திரும்பினார். 1924 செப்டம்பர் 29–ஆம் தேதி இங்கிலாந்தின் டன்ப்ரிட்ஜ் வெல்ஸ் (Tunbridge Wells) என்ற இடத்தில் தனது 73 –வது வயதில் கிறிஸ்துவுக்குள் நித்திரையடைந்தார்கள்.

"ஒளியை நோக்கி" என்ற நோக்கில் அவர் தொடங்கிய இந்தப் பணி, இன்று 'தரிசனமனை' (House of Vision) என்ற பெயரில் பன்முகத்தன்மை கொண்ட நிறுவனமாக வளர்ந்து நிற்கிறது. பார்வையற்றோர் சமூகத்தின் ஒரு அங்கமாக, மரியாதையுடனும் சுயசார்புடனும் வாழ்வதற்கு இந்திய தேசத்திற்கு வந்த மிஷனெரி மிஸ் அனி ஜேன் ஆஸ்க்வித் போட்ட அடித்தளம் என்றும் போற்றுதலுக்குரியது.

கிறிஸ்துவின் பணியில் **Rev. K. ஜெபசிங் செல்வராஜா**

(நூல் உதவி: Christian Historical Society)

இனி ஒடுக்குகிறவன் அவர்களிடத்தில் கடந்து வருவதில்லை.

மிஷனெரி வரலாறு

கிறிஸ்டியன் பிரட்ரிக் ஸ்வார்ட்ஸ்

கிறிஸ்டியன் பிரட்ரிக் ஸ்வார்ட்ஸ் பிரஷ்யா (தற்போதைய போலந்து) நாட்டில் சோனென்பர்க் என்ற நகரில் 26 அக்டோபர் 1726-ல் ஜார்ஜ் ஸ்வார்ட்ஸ் - மார்க்ரெட் கிரண்ட் என்ற பெற்றோருக்குப் பிறந்தார். சிறுவயதிலேயே அவரது தாயாரை இழந்து விட்டார். தகப்பனார் அவர்மீது காட்டிய ஆர்வமும் ஊட்டிய உற்சாகமுமே அவரை மிஷனெரிப்பணிக்கு ஊக்கப்படுத்தியது. ஹாலே பல்கலைக்கழகத்தில் இறையியல் பயின்றார். மிஷனெரிப்பணிக்கு, தன்னை அர்ப்பணித்து தன்னை தகுதிப்படுத்திக் கொண்டார்.

கோப்பநேகன், டேனிஷ் மிஷனெரி சொசைட்டி மூலமாக ஸ்வார்ட்ஸ் இந்தியாவிற்கு மிஷனெரியாக அனுப்பப்பட்டார். 1750-ம் ஆண்டு சீகன்பால் வந்திறங்கிய அதே தரங்கபாடிக்கு வந்து சேர்ந்தார். அப்பொழுதே சீகன்பாலின் ஊழியத்தின் மூலமாக இயேசுவை ஏற்றுக் கொண்ட 1700க்கும் மேற்பட்ட தமிழ் கிறிஸ்தவர்கள் இருந்தார்கள். மிஷனெரியாகத் தன்னுடைய பணியை ஆரம்பித்தார். ஆங்கில கிழக்கிந்திய கம்பெனியார் 1768-ல் அவரை திருச்சிக்கு வரவழைத்து இராணுவவீரர்களுக்கு சிற்றாலய போதகராகவும், அவர்களுடைய ஆலயப் போதகராகவும் வைத்துக் கொண்டனர். 1778-ல் அவர் தஞ்சாவூருக்கு திரும்பிச் சென்று தஞ்சாவூரை மையமாக வைத்து செயலாற்றினார்.

அநாதைச் சிறுவர்களை அடையாளம் கண்டு அவர்களை ஒன்று சேர்த்து தஞ்சாவூரில் அநாதை இல்லத்தை நடத்தினார். படிப்பறிவற்ற நிலையிலிருந்த மக்களைக்கண்டு மனதுருகினவராக அநேகபள்ளிகளை நிறுவினார்.

உங்கள் கைகள் திடப்படக்கடவது என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.

இதில் தஞ்சாவூரிலும், இராமநாதபுரத்திலும் உள்ள பள்ளிகள் குறிப்பிடத் தக்கவைகளாகும். ஸ்வார்ட்ஸ் அருட்பணியின் காரணமாக 6000க்கும் மேற்பட்ட தமிழ்மக்கள் இயேசுகிறிஸ்துவை ஏற்றுக் கொண்டனர். பிரிட்டனில் வெளிநாடுகளில் நடக்கும் மிஷனெரிப்பணியை குறித்து மிஷன் வரலாற்று ஆசிரியர் நடத்திய ஆய்வுக்குறிப்பில் ஸ்வார்ட்ஸை குறிப்பிடும் போது "தென் இந்தியாவின் அப்போஸ்தலன்" என்று குறிப்பிட்டார்.

முதல்முறையாக 1778-ல் பாளையங்கோட்டைக்குச் சென்றார். கிளாரின்தா முதல் சபையின் ஆலயத்தை பாளையங்கோட்டையில் கட்டினார். 1785-ம் ஆண்டு ஆகஸ்டு 24-ல் ஸ்வார்ட்ஸ் வந்து முதல் ஆலயத்தை பிரதிஷ்டை செய்து ஆரம்பித்து வைத்தார். ஆங்கிலேயர்களும், தமிழர்களும் அங்கு ஆராதித்தனர். பின் அப்பகுதியில் பல ஆலயங்கள் உருவாகின. ஆகவே கிறிஸ்தவத்தில் அவர் "திருநெல்வேலியின் தந்தை" என்று அழைக்கப் பட்டார். கிளாரின்தா, சத்தியநாதன், தாவீது சுந்தரானந்தம், வேதநாயகம் சாஸ்திரி ஆகியோர் அவர் உருவாக்கிய நற்கருவிகள்.

அவருடைய 48 ஆண்டு அருட்பணிகாலத்தில் ஒரு முறை கூட தன் தாய் நாட்டிற்குத் திரும்பிச் செல்லவில்லை. 13 பிப்ரவரி 1798-ல் தன்னுடைய 72வது வயதில் தான் நேசித்துவந்த இயேசுவோடு இணைந்து கொண்டார். அவரைத் தகப்பனைப் போல நேசித்த சரபோஜி இராஜா தஞ்சாவூரில் அவருக்கு ஒரு நினைவுத்தூண் நிறுவினார். ஆங்கிலகிழக்கிந்திய கம்பெனி சென்னையிலுள்ள செயின்ட்மேரீஸ் ஆலய வளாகத்தில் அவருக்கு ஒரு நினைவுச் சின்னத்தை நிறுவினார்கள். நூற்றாண்டுகள் கடந்து சென்றாலும் அவரது நற்பணி இன்றும் நினைவு கூறப்படுகின்றன.

ஆண்டவரே! என் வாழ்க்கை முழுவதும்
உம்மைப் பிரதிபலித்து உமது பணி செய்ய
என்னை வழிநடத்தும்.

நூல் உதவி :
தென்தமிழகத்தில் கிறிஸ்தவ மிஷனெரிகள் திருமதி. **ரீட்டா ஞானஜோதி**

பயப்படாதேயுங்கள், உங்கள் கைகள் திடப்படக்கடவது.

தேவாலய வரலாறு

தூய யோவான் பேராலயம், நாசரேத்

1803 ஆம் ஆண்டு SPCK மிஷனெரியான Rev. JC. Kowoff என்பவரால் ஒரு கிராமத்தில் இடம் வாங்கப்பட்டது. அதே ஆண்டு 8 குடும்பங்களைக் கொண்ட ஷான்பத்து என்ற அந்த கிராமத்தில் 8 குடும்பங்கள் Rev. சத்தியநாதன் மூலமாக கிறிஸ்தவர்களாக மாறினர்.

அதின் பரப்பு 7 சதுர மைல்கள் ஆகும். பனை ஓலைகளால் வேயப்பட்ட கூரை கட்டிடமான முதல் தேவாலயம் 1803ல் கட்டப்பட்டு புனித ஜான் தேவாலயம் என பெயரிடப்பட்டது. 1805 ஆம் ஆண்டு அந்த இடத்தின் பெயர் நாசரேத் என்று மாற்றப்பட்டது.

1829 ம் ஆண்டு Rev. David Rosen நாசரேத் தேவாலயத்திற்கு அடிக்கல் நாட்டினர். அடுத்த ஆண்டு 1830 இல் தேவாலயம் Rev. அடைக்கலத்தால் கட்டப்பட்டது.

1852 to 1908 Arthur Margoschis SPG மிஷனெரியாக England தேசத்திலிருந்து இங்கு வந்து ஊழியம் செய்தார். இவர் நாசரேத்தின் தந்தை என அழைக்கப்பட்டார். அநேக வளர்ச்சிப் பணியை செய்தார். அவர் காலத்தில் தேவாலயத்தை புதுப்பித்தார். ஆலயத்தின் பின்புற பகுதியை விரிவுபடுத்தினார். அவர் ஒரு புதிய பெரிய தேவாலயத்தை கட்ட திட்டமிட்டார் ஆனால் அந்த திட்டம் அவரது காலங்களில் நிறைவேற்றப்படவில்லை.

அதை தொடர்ந்து வந்த குருமார்களின் காலகட்டத்தில் Rev. C.S. Stapley, Rev. E.H.M Waller, Rev. Canon D Koilpillai பணி செய்து வந்தனர். 1928 ம் ஆண்டு பேராயர் Norman H.Tubbs அவர்களால் இந்த ஆலயம் அர்ப்பணிக்கப்பட்டது. தேவாலய கோபுரம் 200 அடியாகும். 1940ல் கோபுரம் முழுமையாக கட்டி முடிக்கப்பட்டது. முன்பு திருநெல்வேலி மறை மாவட்டத்தில் இருந்த இவ்வாலயம் 2003ம் வருடம் தூத்துக்குடி மறை மாவட்ட பேராலயமாக மாற்றப்பட்டது. Canon Arthur Margoschis (Father of Nazareth) அவர்களுடைய கல்லறை தேவாலய வளாகத்தில் அமைந்துள்ளது. ஆலய கட்டிட அமைப்பு இங்கிலாந்து தேசத்தில் உள்ள ஆலயங்கள் போல Gothic Architecture அமைப்புடன் கட்டப்பட்டுள்ளது. தினமும் காலை நற்கருணை ஆராதனை இவ்வாலயத்தில் நடத்தப்பட்டு வருகிறது.

Rev. ஆன்றோ ஜெபஸ்

திரு. **ஜோனத்தான் சாமுவேல்**

அவர்கள் எனக்கு உண்மையும் நீதியுமான ஜனமாயிருப்பார்கள்.

அவசரம்

பள்ளி செல்லும் பிள்ளைகளை அவர்களுக்கு தேவையான உணவு, தண்ணீர் பாட்டில், யூனிபார்ம் எடுத்து வைப்பது என்று பெற்றோர்கள் அதிகாலை எழுந்து தயார் செய்வதில் அவசரம் காட்டுகிறார்கள். ஆபீஸ் மற்றும் வேலைகளுக்கு செல்பவர்கள் குறித்தோ சொல்வதற்கில்லை. அதுவும் பெரிய நகரங்களில் வசிப்பவர்களைப் பார்த்தால் அவர்கள் ஓடிக்கொண்டே தான் இருப்பார்கள். ரெயிலைப் பிடிப்பதானாலும், பேருந்தை பிடிப்பதானாலும் ஓட வேண்டிய நிலைதான். அவர்களுக்கு நிற்பதற்கு, நிதானித்து யோசிப்பதற்கு என்று நேரமே கிடைப்பதில்லை. எதிலும் அவசரகதிதான். இதில் குறை கூற ஒன்றுமில்லை. இந்த உலகமே அவசரகதியில்தான் இயங்கிக் கொண்டிருக்கிறது. எல்லோரும் நிகழ்காலத்தை எண்ணியே செயல்பட வேண்டியதிருக்கிறது. கொஞ்சம் நாம் தாமதித்தாலும் நாம் பின்னுக்குத் தள்ளப்பட்டுவிடுவோம் என்ற பயம் நம் அனைவருக்கும் இருப்பது இயற்கையானது தான்.

ஆனாலும் நாம் நம்முடைய ஆத்துமாவின் எதிர்காலத்தை குறித்தும் சிறிது சிந்திக்க வேண்டியவர்களாய் இருக்கிறோம். அதனால் எல்லாநேரமும் அது குறித்து சிந்திக்க வேண்டும் என்று சொல்லுவதற்கில்லை. நமக்கு கிடைக்கும் சொற்ப நேரத்தையும் நமது தேவனாகிய கர்த்தரிடத்தில் நெருங்கி செல்ல அவரது பாதத்தண்டை நமது விண்ணப்பங்களை ஏறெடுக்க, நமது ஸ்தோத்திர பலிகளை, நன்றியை காட்ட பிரயோஜனப்படுத்திக் கொள்ள வேண்டும். பஸ்ஸில், வாகனங்களில், நடக்கையிலும், சிறிய ஜெபங்களை ஏறெடுக்கலாம். ஒரு நிமிடம் செய்தாலும் அது கர்த்தருக்கு மிகவும் பிரியமாய் இருக்கும். அப்படி செய்யும்போது அவரை நெருங்கி ஜீவிக்க வழிவகுக்கும். எத்தனை வேலை இருந்தாலும் சிறு மணித்துளிகளையாவது அவருக்கென்று ஒதுக்கிப் பார்ப்போமானால் மேன்மையாக இருக்கும். எனவே, நம்மை காத்து, அனுதினமும் போஷித்து, ஆபத்துக்களுக்கும், தீங்குகளுக்கும், நோய்களுக்கும் விலக்கி காத்து நடத்துபவராகிய நமது நாதர் இயேசு கிறிஸ்துவுக்கு இந்த அவசர உலகத்தில் சிறிது நேரத்தையாவது ஒதுக்கி அவருடைய நித்திய ராஜ்யத்திற்கு பாத்திரவாழியாக ஆகலாமே. அல்லேலூயா. ஆமென்.

திரு. **I. ஜான் ஆசீர்வாதம்**

நான் அவர்களுக்குத் தேவனாயிருப்பேன் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.

கடுகு அளவு விசுவாசம்
(Faith as a Grain of Mustard Seed)

கிறிஸ்தவ வாழ்க்கையில் விசுவாசம் என்பது மிகவும் அடிப்படையான ஒரு காரியமாகும். இயேசு கிறிஸ்து தமது சீஷர்களுக்கு விசுவாசத்தின் வல்லமையைக் கற்றுக்கொடுக்க பயன்படுத்திய மிக எளிய, ஆனால் மிக ஆழமான உவமைதான் "கடுகு அளவு விசுவாசம்" என்பதாகும்.

வேதாகமத்தில்: மத்தேயு 17 : 20-இல் இயேசு தம் சீஷர்களை நோக்கி : கடுகு விதை அளவு விசுவாசம் உங்களுக்கு இருந்தால், நீங்கள் இந்த மலையைப் பார்த்து, இவ்விடம் விட்டு அப்புறம்போ என்று சொல்ல அது அப்புறம்போம்; உங்களால் கூடாத காரியம் ஒன்றுமிராது என்று கூறுகிறார். சீஷர்களால் ஒரு சிறுவனின் அசுத்த ஆவியைத் துரத்த முடியாமல் போனபோது, அவர்களின் அவிசுவாசத்தை சுட்டிக்காட்டி இயேசு இந்தப் போதனையை அளித்தார்.

கடுகு விதையின் சிறப்புகள் :

இயேசு ஏன் விசுவாசத்தைக் கடுகிற்கு ஒப்பிட்டார் என்பதில் மூன்று முக்கிய ஆவிக்குரிய சத்தியங்கள் உள்ளன.

i) உயிருள்ள விசுவாசம் :

யூத கலாச்சாரத்தில் கடுகு விதை மிகச் சிறியதாகக் கருதப்பட்டது. ஒரு பெரிய கல்லை விடக் கடுகு சிறியதுதான், ஆனால் கல்லுக்குள் உயிர் இல்லை; கடுகிற்குள் உயிர் இருக்கிறது. நம் விசுவாசம் வெளியில் மலையளவு பெரிதாகத் தெரியாவிட்டாலும், அதற்குள் தேவன் மேல் உள்ள உயிருள்ள நம்பிக்கை இருக்க வேண்டும்.

ii) வளரும் தன்மை :

ஒரு சிறு கடுகு விதை மண்ணில் விதைக்கப்படும்போது, அது வளர்ந்து ஆகாயத்துப் பறவைகள் வந்து தங்கும் அளவுக்குப் பெரிய மரமாக மாறுகிறது (மத்தேயு 13 : 31-32) அதுபோல ஆரம்பத்தில் நம் விசுவாசம் சிறியதாக இருந்தாலும், தேவனுடைய வார்த்தையினால் அது நாளுக்கு நாள் வளர வேண்டும்.

iii) தடைகளை உடைக்கும் வல்லமை :

தன்னைவிடப் பல மடங்கு எடையுள்ள கடினமான மண்ணையும், பாறையையும் துளைத்துக் கொண்டு கடுகு விதை முளைத்து வருகிறது.

நம் வாழ்விற்கான பாடம் :

நம்முடைய அன்றாட வாழ்க்கையில் மலைப்போல வந்து நிற்கும் கடன் பிரச்சனைகள், தீராத நோய்கள், மனக்கவலைகள் மற்றும் குடும்பப் போராட்டங்களைக் கண்டு நாம் சோர்ந்து போகக்கூடாது. என்னால் இதை மாற்ற முடியாது, ஆனால் என் தேவனாலே எல்லாம் கூடும் என்று நாம் கடுகு அளவு வைக்கும் உண்மையான விசுவாசமே அந்தப் பெரிய மலை போன்ற சூழ்நிலைகளை நம் வாழ்வில் இருந்து அப்புறப்படுத்தும்.

முடிவுரை :

தேவனுக்கு நம்முடைய விசுவாசத்தின் அளவு முக்கியம் அல்ல, அதன் ஆழமும், உண்மையும் தான் முக்கியம். எனவே சூழ்நிலைகளைப் பாராமல், அற்புதம் செய்யும் தேவன்மேல் விசுவாசம் வைத்து ஜெபிக்கும்போது, நம் வாழ்வில் கூடாத காரியம் ஒன்றுமே இருக்காது.

W. Daphne Sharon

கிருபையுண்டாவதாக, கிருபையுண்டாவதாக என்று ஆர்ப்பரிப்பார்கள்.

ஆதாம் முதல் நோவா வரை வயதினை அறிவோம்

	ஆதாம் 930	சேத் 912	ஏனோஸ் 905	கேனான் 910	மகலாலெயேல் 895	யாரேத் 962	ஏனோக்கு 365	மெத்தூசலா 969	லாமேக்கு 777	நோவா 950
சேத்	130									
ஏனோஸ்	235	105								
கேனான்	325	195	90							
மகலாலெயேல்	395	265	160	70						
யாரேத்	460	330	225	135	65					
ஏனோக்கு	622	492	387	297	227	162				
மெத்தூசலா	687	557	452	362	292	227	65			
லாமேக்கு	874 (56)	744 (168)	639	549	479	414	252 (113)	187		
நோவா			821 (84)	731 (179)	661 (234)	596 (366)		369	182	
சேம் காம் யாபேத்								869 (100)	682 (95)	500

உங்களைத் தொடுகிறவன் அவருடைய கண்மணியைத் தொடுகிறான்.

LETS PLAY WITH NUMBERS TODAY.

Lets play with numbers today. இங்க இருக்குற அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளவை, ஆதியாகமம் 5ஆம் அதிகாரத்தில் உள்ளது. ஆதாம் முதல் நோவா வரை உயிர்வாழ்ந்த நாட்களும், அவர்கள் குமாரர் பிறந்த போது உள்ள வயதும் கொடுக்கப்பட்டுள்ளது. கொடுக்கப்பட்ட விவரத்தை வைத்து Cumulative Frequency போட்டிருக்கிறேன். இப்போது விவரங்களை பார்ப்போமா.?

ஆதாம் :

ஆதாம் 130வது வயதில் சேத்தைப் பெற்றார். ஆதாம் 930 வருஷம் உயிர்வாழ்ந்தார். ஆதாம் தன்னுடைய எட்டாம் தலைமுறையான லாமேக்குவின் பிறப்பையும் பார்த்தவர். லாமேக்கின் 56 வது வயதில் ஆதாம் மரிக்கிறார்.

சேத் :

ஆதாமின் குமாரனான சேத், தன்னுடைய 105வது வயதில் ஏனோசைப் பெற்றார். சேத் 912 வருஷம் உயிர் வாழ்ந்தார். சேத் தன்னுடைய ஏழாம் தலைமுறையான லாமேக்குவின் பிறப்பைப் பார்த்தவர். சேத் லாமேக்கின் 168வது வயதில் மரித்தார்.

ஏனோஸ் :

ஏனோஸ் தன்னுடைய 90வது வயதில் கேனானைப் பெற்றார். ஏனோஸ் 905 வருடம் உயிர்வாழ்ந்தார். ஏனோஸ் தன் ஏழாம் தலைமுறையான நோவாவின் பிறப்பைப் பார்த்தவர். நோவாவின் 84 வது வயதில் ஏனோஸ் மரிக்கிறார்.

கேனான் :

கேனான் தன்னுடைய 70 வது வயதில் மகலாலெயேலைப் பெற்றான். கேனான் 910 வருஷம் உயிரோடே வாழ்ந்தார். கேனான் தன்னுடைய ஆறாம் தலைமுறையான நோவாவின் பிறப்பைப் பார்த்தவர். நோவாவின் 179 வது வயதில் கேனான் மரித்தார்.

மகலாலெயேல் :

மகலாலெயேல் தன்னுடைய 65வது வயதில் யாரேத்தைப் பெற்றார். மகலாலெயேல் 895 வருஷம் உயிர் வாழ்ந்தார். மகலாலெயேல் தன்னுடைய ஐந்தாம் தலைமுறையான நோவாவின் பிறப்பைப் பார்த்தவர். நோவாவின் 234வது வயதில் மகலாலெயேல் மரித்தார்.

யாரேத் :

யாரேத் தன்னுடைய 162வது வயதில் ஏனோக்கைப் பெற்றார். யாரேத் 962 வருஷம் உயிர் வாழ்ந்தார். யாரேத் தன்னுடைய நான்காம் தலைமுறையான நோவாவின் பிறப்பைப் பார்த்தவர். நோவாவின் 366 வது வயதில் யாரேத் மரித்தார்.

ஏனோக்கு :

ஏனோக்கு தன்னுடைய 65வது வயதில் மெத்தூசலாவைப் பெற்றார். ஏனோக்கு 365 வருஷம் உயிர் வாழ்ந்தார். ஏனோக்கு தன்னுடைய இரண்டாம் தலைமுறையான லாமேக்குவின் பிறப்பைப் பார்த்தவர். லாமேக்கின் 113வது வயதில் ஏனோக்கு காணப்படாமல் போனார்.

இனிச் சங்கரிப்பில்லாமல் எருசலேம் சுகமாய்த் தங்கியிருக்கும்.

மெத்தூசலா :

மெத்தூசலா 187வது வயதில் லாமேக்கைப் பெற்றார். மெத்தூசலா 969 வருஷம் உயிர் வாழ்ந்தார். மெத்தூசலா தன்னுடைய மூன்றாம் தலைமுறையான சேம், காம், யாபேத்தின் பிறப்பைப் பார்த்தவர்.

மெத்தூசலா உயிரோடு இருந்த காலம்	= 969
லாமேக்கு பிறந்தபோது மெத்தூசலா வயது	= 187
	782
நோவா பிறக்கும் போது லாமேக்கின் வயது	= 182
	600
ஜலப்பிரளயத்தின் போது நோவாவின் வயது	= 600
	0

மெத்தூசலா ஜலப்பிரளயம் உண்டான வருடத்தில் மரித்தார். ஜலப்பிரளயத்தில் கூட மரித்திருக்கலாம்.

லாமேக்கு :

லாமேக்கு 182வது வயதில் நோவாவைப் பெற்றார். லாமேக்கு 777 வருஷம் உயிர் வாழ்ந்தார். லாமேக்கு தன்னுடைய இரண்டாம் தலைமுறையான சேம், காம், யாபேத்தின் பிறப்பைப் பார்த்தவர்.

லாமேக்கு உயிரோடு இருந்த காலம்	= 777
லாமேக்கு நோவாவை பெறும்போது வயது	= 182
	595
ஜலப்பிரளயத்தின் போது நோவாவின் வயது	= 600
	5

லாமேக்கு ஜலப்பிரளயத்திற்கு ஐந்து ஆண்டுகள் முன்பே மரித்துவிட்டார்.

குறிப்பு :

- ஆதாம், சேத், ஏனோஸ், கேனான், மகலாலெயேல், யாரேத், ஏனோக்கு, மெத்தூசலா, லாமேக்கு ஒருவரை ஒருவர் பார்த்ததுண்டு. ஆதாம் தேவனோடு பேசினவற்றையும், தேவன் ஆதாமிடம் பேசியவற்றையும், ஏதேன் தோட்டத்தின் அனுபவத்தையும் நேரடியாக கேட்டிருப்பார்கள்.
- நோவா ஆதாமையும், சேத்தையும், ஏனோக்கையும், பார்த்ததில்லை.
- மெத்தூசலா ஜலப்பிரளயம் உண்டான வருஷம் மரித்தார்.
- லாமேக்கு ஜலப்பிரளயம் உண்டான வருஷத்திற்கு ஐந்து ஆண்டுகள் முன்பே மரித்துவிட்டார்.
- பூமியிலே பாவம் பெருகப்பெருக தேவன் மனிதனின் ஆயுசு நாட்களை குறைத்து விட்டார்.

Hope you enjoyed these facts.

With Love & Prayer: Mrs. **Dayana Lal**

அவர்கள் என் நாமத்தை தொழுது கொள்வார்கள்.

கர்த்தருக்கு பிரியமானது எது?

தேவனுடைய நாமத்தைப் பாட்டினால் துதித்து, அவரை தோத்திரத்தினால் மகிமைப்படுத்துவேன். கொம்பும் விரிகுளம்புமுள்ள காளையெருதைப் பார்க்கிலும், இதுவே கர்த்தருக்குப் பிரியமாயிருக்கும். சங்கீதம் 69 : 30, 31

அன்பானவர்களே! நம் வீட்டில் ஒவ்வொருவருக்கும் என்ன பிடிக்கும் என்பதை நாம் நன்றாய் அறிந்து வைத்திருக்கிறோம். அதனை செய்தும் கொடுக்கின்றோம். ஆனால் "கர்த்தருக்குப் பிரியமானது எது" என்று நாம் நினைத்திருக்கிறோமா? தேவனுடைய நாமத்தை பாட்டினால் துதித்து அவரை ஸ்தோத்தரிப்பது அவருக்குப் பிரியம். நாம் பாட்டு பாடுவது அவருக்கு பிடித்தமான ஒன்று. நாம் பாடும்பொழுது கர்த்தர் கவனித்துக் கேட்பார். நாம் சத்தமாகப் பாடவேண்டும், உற்சாகமாகப் பாட வேண்டும்.

பாமாலை பாடலில் ஒரு பக்தன் இவ்வாறாகப் பாடுகிறார். (பாமாலை 387) "ஆ என்னில் நூறு வாயும் நாவும் இருந்தால்" என்ற பாடலில், பக்தன் ஒரு வாய் எனக்கு போதவில்லை நூறு வாயும் நாவும் எனக்கு வேண்டும். ஏனென்றால் அவர் எனக்கு செய்த நன்மை யாவையும் துதிகளோடே ஓயாமல் பாடவேண்டும். அதுமட்டுமல்ல என் சத்தம் வானமளவாக போய் எட்ட வேண்டும். ஏனென்றால் கர்த்தாவைப் போற்ற வாஞ்சையாக இருக்கின்றேன். நான் பாடும் பொழுது என் இரத்தமெல்லாம் பொங்க வேண்டும் என்று பக்தன் தன்னை உணர்ந்து இந்த பாட்டைப் பாடியிருக்கின்றார். நாமும் இவ்வாறாகத்தான் பாட்டுகளைப் பாடவேண்டும். இப்படி பாடும் பொழுது கர்த்தர் நம்மேல் பிரியமாய் இருக்கின்றார்.

இதோ நான் வந்து உன் நடுவில் வாசம்பண்ணுவேன்.

தமக்கு பயந்து தமது கிருபைக்குக் காத்திருக்கிறவர்கள் மேல் கர்த்தர் பிரியமாயிருக்கிறார். சங்கீதம். 147 : 11

கர்த்தருக்கு பயப்படுகிறவர்கள் மேலும் அவருடைய கிருபைக்கு காத்திருக்கிறவர்கள் மேலும் கர்த்தர் பிரியமாயிருக்கிறார். நாம் தீமையை விட்டு விலகுவதுதான் கர்த்தருக்கு பயப்படும் பயம். கர்த்தருக்கு பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம். கர்த்தரை தேடுகிறவர்களுக்கு ஒரு நன்மையும் குறைவுபடாது. கர்த்தருக்கு பயந்து தீமையை விட்டு விலகும்பொழுது அவருடைய கிருபை நம்மை தாங்குகிறது. தேவையானது கிடைக்கிறது. அற்புதம் நடக்கிறது. அவர் கிருபைக்கு காத்திருக்க வேண்டும். கர்த்தருக்கு பயப்பட வேண்டும். அப்பொழுது கர்த்தர் நம்மேல் பிரியமாயிருக்கிறார்.

உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார். II கொரிந்தியர் 9 : 7

அவர் நமக்கு ஐசுவர்யத்தை உற்சாகமாய் கொடுக்கிறார். நாமும் அவருக்கு உற்சாகமாய் காணிக்கை கொடுக்க வேண்டும். காணிக்கை அளவை அவர் பார்ப்பதில்லை. அவருக்கு ஒரு மடங்கு கொடுக்கும்பொழுது பத்து மடங்கு அவர் திரும்ப கொடுக்கிறார். சில நேரங்களில் காணிக்கையை போட மனம் வருவதில்லை. நம்மிடம் அதிகம் இருந்தாலும் கொடுக்க மனம் வருவதில்லை. அப்படி இருக்கக் கூடாது. உற்சாகமாய் கொடுக்கிறவர் களிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார்.

அன்றியும் நன்மை செய்யவும், தான தர்மம் பண்ணவும் மறவாதிருங்கள். இப்படிப்பட்ட பலிகளின் மேல் தேவன் பிரியமாயிருக்கிறார். எபிரெயர் 13 : 16

பிறருக்கு நன்மை செய்ய வேண்டும். எக்காரணத்தைக் கொண்டும் தீமை செய்யக்கூடாது. கஷ்டப்படுகிறவர்களுக்கு உதவ வேண்டும் இப்படி நாம் செய்யும்போது கர்த்தர் நம்மேல் பிரியமாயிருக்கிறார்.

ஆதலால் பிரியமானவர்களே,

நாம் உற்சாகமாய் பாடுவோம்! உற்சாகமாய் கொடுப்போம்!

உற்சாகமாய் நன்மை செய்வோம்! உற்சாகமாய் தான தர்மம் செய்வோம்! அவர் நம்மேல் பிரியம் வைக்க அவர் விரும்பியபடி நடப்போம். நடப்போமா!

திருமதி. **ஜே. ஸ்டெல்லா வில்லியம்**

என் பட்டணங்கள் நன்மையினால் பரம்பியிருக்கும்.

நமது கிளை ஆலய செய்திகள்

தூய பவுல் ஆலயம் – அச்சம்பத்து

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் நல்வாழ்த்துக்கள்.

ஆண்டவருடைய பெரிதான கிருபையினால் அச்சம்பத்து திருச்சபை ஊழியங்கள் மிகவும் சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

கடந்த மே மாதம் 1 முதல் 10 வரை விடுமுறைவேதாகமப்பள்ளி சிறப்பாக ஏற்பாடுகள் செய்யப்பட்டு சுமார் 140 குழந்தைகள் பங்குபெற்று ஆண்டவருடைய அன்பை அறிந்து கொண்டனர். 17 ஆசிரியர்கள் 10 தன்னார்வலர்கள் உதவியுடன் சிறப்பு பொறுப்பாளர் திரு. **ஜெரோம்** அவர்களின் முன்னிலையில் **"ஜெயிப்பவன் யார்?"** என்ற தலைப்பின்கீழ் சிறப்பாக நடைபெற தேவன் உதவி செய்தார்.

நமது ஆலய ஆராதனைகளில் திருச்சபையின் மக்கள் சுமார் 20 முதல் 30 பேர் பங்குபெற்று ஆராதனையில் தேவ நாமத்தை மகிமைப்படுத்துகின்றனர். அவர்களுக்கு மாதம் முதல் நாள் அதிகாலை 5 : 30 மணி ஆராதனையும், முதல் ஞாயிறு காலை 9 மணி ஆராதனையும் திருவிருந்து ஆராதனையாக நடத்தப்படுகின்றது. சிறப்பு செய்திகள் கொடுக்கப்பட்டு, விசுவாசிகள் விசுவாச வாழ்வில் வளர தூண்டுதலாக அமைகிறது.

ஆலய ஆராதனைமுடிவில் திருச்சபையில் ஏழை எளியோருக்கு இலவச அரிசி, பருப்பு, சீனி, எண்ணெய் போன்ற பொருட்கள் வழங்கப்பட்டது. சுமார் 20 பேர் பயன்பெற்று ஆண்டவரால் ஆசீர்வதிக்கப்பட்டனர்.

ஒவ்வொரு நாளும் மாலை 5 : 45 மணி முதல் 7 : 15 வரை ஆலய வளாகத்தில் இலவச டியூசன் வகுப்புகள் நடைபெறுகின்றது சுமார் 20 மாணவ. மாணவியர்கள் கலந்து கொள்கின்றனர். அவர்களுக்கு கர்த்தருடைய ஜெபம் மற்றும் வேத வசனங்களும் கற்று கொடுக்கப்படுகின்றது.

மேலும் சிறுவர் ஊழியங்கள், பெண்கள்கூடுகை, வீட்டு ஜெபக் கூட்டங்கள், கிராம சுவிசேஷப் பணிகளும் நடைபெற்று வருகின்றன. திருச்சபை வளரவும், திருச்சபை குடும்பங்கள் ஆசீர்வதிக்கப்படவும் தொடர்ந்து ஜெபித்துக் கொள்ளுங்கள்.

ஒருங்கிணைப்பாளர்கள்,
திரு. **டேனியல்**
திரு. **ஜேம்ஸ்**

திருச்சபையின் பணியில்
Rev. R. ஜெயசீலன்

கர்த்தர் சீயோனைத் தேற்றரவுபண்ணுவார்.

சகல பரிசுத்தவான்களின் ஆலயம் - கீழசின்னனம்பட்டி

VBS மே மாதம் 1-ம் தேதியிலிருந்து 7-ம் தேதி வரை ஏழு நாட்களுக்கு **"ஜெயிப்பவன் யார்?"** என்ற தலைப்பின்கீழ் நடைபெற்றது. சுற்றி கிராமங்களிலிருந்து 120 பிள்ளைகள் மற்றும் சிலரின் பெற்றோர் கலந்து கொண்டனர். உற்சாகமாக பிள்ளைகள் தங்களை எல்லா செயல்பாடுகளிலும் ஈடுபடுத்திக் கொண்டனர்.

தினந்தோறும் மாலை கிராம ஊழியங்கள் கர்த்தரின் கிருபையினால் நடக்கின்றது. கிராமங்களிலுள்ள விசுவாசிகளின் வீடுகளில் சின்ன பாடலுடன் கூடிய ஜெபம் மற்றும் அவர்கள் குடும்ப நலனுக்கான ஆலோசனைகளும் வழங்கப்படுகிறது. கிராமப் பிள்ளைகளுடன் கலந்து சிறிய உரையாடல்களுடனும், நலவிசாரிப்புடனும் அவர்களுக்கான ஜெபங்களுடனும்கூட அவர்களை சபைக்கு வர உற்சாகப்படுத்தி வருகிறோம்.

ஒவ்வொரு வாரமும் ஞாயிறு காலை 9 : 00 மணி முதல் 10 : 30 வரை ஆராதனை நடைபெறுகிறது. ஆராதனை முடிந்தவுடன் மதிய உணவு அளிக்கப்படுகிறது. ஆராதனை செய்தி நேரத்தில் பிள்ளைகளுக்கான 'Sunday School' நடைபெறுகிறது. பிள்ளைகள், பெரியவர்கள் என 35 பேர் கலந்து கொள்கின்றனர்.

இதுதவிர, புதியதாக 'House Prayers' ஆரம்பித்து உள்ளோம். ஒவ்வொரு செவ்வாய்க் கிழமையும் ஒவ்வொரு விசுவாசியின் வீட்டில் நடைபெறுகிறது. அவர்களின் தேவைக்காகவும், விண்ணப்பங்களுக்காகவும், ஆவிக்குரிய நலனுக்காகவும் சுற்றியுள்ளவர்களின் நலனுக்காகவும் ஜெபிப்பதினால் இவர்களும் அன்புடன் தங்களை இதிலே ஈடுபடுத்திக் கொள்கின்றனர்.

புதிதாக நமது ஆலயத்திற்கு வருகிற தாய் தகப்பன் இல்லாத சிறுமிக்கு வீடு கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது.

ஒருங்கிணைப்பாளர்கள்,
திரு. **ஆரோக்கிய செல்வம்**
திரு. **ஜான் கென்னடி**

கிறிஸ்துவின் பணியில்
M.E. வெஸ்லி கிளைய்சன்
W. ஜாய்ஸ் பிரீதி

உன்னை முத்திரை மோதிரமாக வைப்பேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

சகல பரிசுத்தவான்களின் ஆலயம்

விராலிப்பட்டி

ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசுவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்.

கர்த்தருடைய பெரிய கிருபையினால் விராலிப்பட்டி, சின்னம நாயக்கன்கோட்டை, செங்கட்டாம்பட்டி, கோவில்பட்டி மணிகாரன்பட்டி பெருமாள்பட்டி ஆகிய கிராமங்களின் ஜெப கூடுகை, வீடுசந்திப்பு, ‘சிறுவர் ஊழியம்,’ ‘கைபிரதி ஊழியம்’ மற்றும் ஞாயிறு ஆராதனைகள் மிக சிறப்பாக நடைபெற்று வருகிறது.

ஞாயிறு ஆராதனை

நமது விராலிப்பட்டி ஆலயத்தில் வாரம் தோறும் காலை 10 மணியிலிருந்து மதியம் 12 : 30 வரை ஆராதனை நடைபெறுகிறது. சிறியவர் பெரியவர் உட்பட 35 லிருந்து 50 பேர் கலந்து கொள்வார்கள் பிள்ளைகளுக்கு மதிய உணவு வழங்கி ஆட்டோவில் கிராமங்களில் கொண்டு விடப்படுகின்றனர்.

நற்செய்தி ஊழியம்

ஒவ்வொரு நாளும் விராலிப்பட்டி சுற்றியுள்ள கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்படுகிறது.

இந்த வருட (V.B.S.) மே 1 முதல் 6

இந்த வருடம் (V.B.S.) மே 1 முதல் 6 தேதி வரை நமது ஆலயத்தில் வைத்து நடை பெற்றது. V.B.S. ல் பங்குபெற்ற சிறுவர்கள் பாடல்கள், வேதவசனங்கள், வேதாகமக் கதைகள் மூலம் ஆண்டவரை அறிந்து கொண்டனர். மாலை நேரங்களில் சுற்றுவட்டாரங்களிலுள்ள கிராமங்களிலும் இச்சிறுவர் ஊழியம் நடைபெற்றது. முடிவு நாளில் பிள்ளைகள் கற்றுக் கொண்டதை நமது போதகர்கள் மத்தியிலும் அவர்கள் பெற்றோர்கள் மத்தியிலும் நமது தலைமை ஆலய சபை மக்கள் மத்தியிலும் செய்து காட்டினார்கள். இந்த வருடம் VBS மிக சிறப்பாக நடைபெற உதவி செய்த தேவனுக்கு நன்றி.

கிறிஸ்துவின் பணியில்,
திரு. **S. ஜோசுவா சக்தி**
கிராம மிஷனெரி

ஒருங்கிணைப்பாளர்,
திரு. **ஆபிரகாம் அமிர்தம்**

நான் இன்றுமுதல் உங்களை ஆசீர்வதிப்பேன்.

மருத்துவ கதை

அனிதா படுக்கையில் புரண்டு புரண்டு படுத்தாள். கடந்த ஒரு வாரமாக இரவில் சரியான தூக்கமே இல்லை. கொட்ட கொட்ட விழித்துக் கொண்டிருந்தாள். அருகில் அவள் கணவர் நன்றாகக் குறட்டை விட்டுத் தூங்கிக் கொண்டிருந்தார். அனிதாவுக்குப் பொறாமையாகவும் எரிச்சலாகவும் இருந்தது.

சில நேரங்களில் அவளுடைய கணவனின் கடுஞ்சொற்கள், மாமியார், பிள்ளைகளின் பேச்சு அவளைப் பாதிக்கும்; தூக்கத்தைக் கலைக்கும். ஆனால் கடந்த வாரத்தில் மனதைப் பாதிக்கும் அளவு எந்தப் பிரச்சனையும் இல்லை. ஆனாலும் தூக்கம் வர மறுத்தது. தூக்கமில்லாததினால் உடல் அசதியாகவும் சோர்வாகவும் இருந்தது.

யாரிடம் இந்தச் சிக்கலைப் பற்றிப் பேசலாம் என்று சிந்தித்துக் கொண்டிருந்த அனிதாவின் மனக்கண்முன் ரீட்டா ஆண்ட்டி வந்தார்கள். ஆண்ட்டி அவளுடைய எதிர்வீட்டில் குடியிருந்தார்கள். மனம் பாரமாக இருக்கும்போதெல்லாம் ரீட்டா ஆண்ட்டியிடம் பகிர்ந்து கொள்வாள். ஆண்ட்டியும் அவளுக்கு நல்ல ஆலோசனைகள், அறிவுரைகள் கூறுவார்கள். ரீட்டா ஆண்ட்டி ஜெபம், சர்ச், சமூகசேவை என்று எப்பொழுதும் பிஸியாக இருப்பார்கள். அவர்களுடைய சாந்த குணம், மகிழ்ச்சியான முகம், கனிவான பேச்சு அனிதாவை அவர்களை மதிக்கவும் நேசிக்கவும் வைத்தது. அனிதா, ரீட்டா ஆண்ட்டி வீட்டிற்குச் சென்றாள்,

ஆண்ட்டி அவளைப் பார்த்தவுடன் **"வா அனிதா** காபி குடிக்கிறாயா? என்ன விசேஷம், கணவர் பிள்ளைகள் எல்லாம் நன்றாக இருக்கிறார்களா?" என்று கரிசனையோடு விசாரித்த ஆண்ட்டியின் வார்த்தைகள் அவள் இதயத்திற்கு இதமாக இருந்தது. சட்டென்று தன் மனதில் இருந்ததைக் கொட்டிவிட்டாள்.

"என்ன ஆண்ட்டி, ஒரு வாரமாக தூக்கமே இல்லை. மனதில் எந்தப் பெரிய கவலையும் இல்லை. அதனால் உடம்பும் சோர்வாக இருக்கிறது. என்ன செய்யலாம் ஆண்ட்டி?" என்று சோர்வுடன் கேட்டாள்.

"ஓ, இதுதான் உன் பிரச்சினையா அனிதா?" என்று கனிவுடன் அவளைப் பார்த்தார்கள் ரீட்டா ஆண்ட்டி. "எனக்கும் சில நேரங்களில் காரணமின்றித் தூக்கம் தடைபடும். நான் கடைபிடிக்கும் சில டிப்ஸை உனக்குச் சொல்கிறேன். முக்கியமான ஒன்று, இரவு 7 : 30 மணிக்குள் டின்னரை முடித்துவிடு. வாரத்தில் இரண்டு நாட்கள் ஒரு டம்ளர் பாலுடன் ¼ ஸ்பூன் ஜாதிக்காய் பவுடர் கலந்து இரவு உணவுடன் குடி. அது மட்டுமல்ல, மற்ற இரண்டு நாட்களில் பாலுடன் ½ ஸ்பூன் கசகசாவைக் கொதிக்க வைத்துக் குடி. ஜாதிக்காய், கசகசா எல்லாம் குளிர்ச்சியான பொருட்கள்; சொன்ன அளவின்படி எடுத்துக் கொள். அனிதா, மற்ற மூன்று நாட்கள் சூடான பாலுடன் தேன் கலந்து குடி. படுப்பதற்கு முன்பாகத் தேங்காய் எண்ணெயைப் பாதங்களில் மசாஜ் செய்தாலும் நல்ல தூக்கம் வரும். கடைசியாக முக்கியமான ஒரு டிப். இரவு உணவுக்குப் பின் செல்போனில் ஃபேஸ்புக், யூடியூப் என்று உருட்டாதே. அது மனதைப் பாதிக்கும்" என்றாள்.

இன்னும் அனிதா, ஒரே ஒரு ஆலோசனை. என் வாழ்க்கையில் எனக்கு ஆலோசனை, வழிகாட்டி, அறிவுரை எல்லாம் தருவது இந்த வேதபுத்தகம் தான். **"ஆண்டவர்தான் நமக்குச் சுகமான நித்திரையைத் தருகிறார்"** என்று வேதம் கூறுகிறது. ஆகவே, படுத்தவுடன் "இயேசுவே எனக்கு நல்ல தூக்கத்தைத் தாருங்கள் என்று அவரிடம் கேள், ஜெபத்தைக் கேட்கிற தேவன் உனக்கு நல்ல நித்திரையைத் தருவார்" என்று சொல்லி, பல ஆலோசனைகளோடு இயேசுவின் அன்பையும் கூறி அனிதாவை அனுப்பினாள். அனிதாவும் ரீட்டா ஆண்ட்டி சொன்ன ஆலோசனைகளோடு இயேசுவிடமும் உதவி கேட்க வேண்டும் என்று தீர்மானித்து, சமாதானத்துடன் தன் வீட்டிற்கு வந்தாள்.

திருமதி. **மஞ்சுளா மனோகரன்**

ஆவியானவரும் உங்கள் நடுவில் நிலைகொண்டிருப்பார்; பயப்படாதேயுங்கள்.

1 கொரிந்தியர் 13

மனன வசனம்

1. நான் மனுஷர் பாஷைகளையும் தூதர் பாஷைகளையும் பேசினாலும், அன்பு எனக்கிராவிட்டால், சத்தமிடுகிற வெண்கலம் போலவும், ஓசையிடுகிற கைத்தாளம் போலவும் இருப்பேன்.
2. நான் தீர்க்கதரிசன வரத்தை உடையவனாயிருந்து, சகல இரகசியங்களையும், சகல அறிவையும் அறிந்தாலும், மலைகளைப் பேர்க்கத்தக்கதாக சகல விசுவாசமுள்ள வனாயிருந்தாலும், அன்பு எனக்கிராவிட்டால் நான் ஒன்றுமில்லை.
3. எனக்கு உண்டான யாவற்றையும் நான் அன்னதானம் பண்ணினாலும், என் சரீரத்தைச் சுட்டெரிக்கப்படுவதற்குக் கொடுத்தாலும், அன்பு எனக்கிரா விட்டால் எனக்குப் பிரயோஜனம் ஒன்றுமில்லை.
4. அன்பு நீடிய சாந்தமும் தயவுமுள்ளது; அன்புக்குப் பொறாமையில்லை; அன்பு தன்னைப் புகழாது, இறுமாப்பாயிராது.

ஜூலை

1 Corinthiar 13

1. If I speak in the tongues of men and of angels, but have not love, I am only a resounding gong or a clanging cymbal.
2. If I have the gift of prophecy and can fathom all mysteries and all knowledge, and if I have a faith that can move mountains, but have not love, I am nothing.
3. If I give all I possess to the poor and surrender my body to the flames, but have not love, I gain nothing.
4. Love is patient, love is kind. It does not envy, it does not boast, it is not proud.

---

5. அயோக்கியமானதைச் செய்யாது, தற்பொழிவை நாடாது, சினமடையாது, தீங்கு நினையாது.
6. அநியாயத்தில் சந்தோஷப்படாமல், சத்தியத்தில் சந்தோஷப்படும்.
7. சகலத்தையும் தாங்கும், சகலத்தையும் விசுவாசிக்கும், சகலத்தையும் நம்பும், சகலத்தையும் சகிக்கும்.
8. அன்பு ஒருக்காலும் ஒழியாது. தீர்க்கதரிசனங்களானாலும் ஒழிந்துபோம், அந்நிய பாஷைகளானாலும் ஓய்ந்துபோகும், அறிவானாலும் ஒழிந்துபோம்.

ஆகஸ்ட்

5. It is not rude, it is not self-seeking, it is not easily angered, it keeps no record of wrongs.
6. Love does not delight in evil but rejoices with the truth.
7, It always protects, always trusts, always hopes, always perseveres.
8. Love never fails. But where there are prophecies, they will cease; where there are tongues, they will be stilled; where there is knowledge, it will pass away.

எருசலேம் குமாரத்தியே, நீ முழு இருதயத்தோடும் மகிழ்ந்து களிகூரு.

9. நம்முடைய அறிவு குறைவுள்ளது. நாம் தீர்க்கதரிசனஞ்சொல்லுதலும் குறைவுள்ளது.

10. நிறைவானது வரும்போது குறைவானது ஒழிந்துபோம்.

11. நான் குழந்தையாயிருந்தபோது குழந்தையைப்போல பேசினேன். குழந்தையைப் போலச் சிந்தித்தேன். குழந்தையைப்போல யோசித்தேன்; நான் புருஷனான போதோ குழந்தைக்கேற்றவைகளை ஒழித்துவிட்டேன்.

செப்டம்பர்

12. இப்பொழுது கண்ணாடியிலே நிழலாட்டமாய்ப் பார்க்கிறோம், அப்பொழுது முகமுகமாய்ப் பார்ப்போம்; இப்பொழுது நான் குறைந்த அறிவுள்ளவன். அப்பொழுது நான் அறியப்பட்டிருக்கிறபடியே அறிந்துகொள்ளுவேன்.

13. இப்பொழுது விசுவாசம், நம்பிக்கை, அன்பு இம்மூன்றும் நிலைத்திருக்கிறது; இவைகளில் அன்பே பெரியது.

9. For we know in part and we prophesy in part.

10. But when perfection comes, the imperfect disappears.

11. When I was a child, I talked like a child, I thought like a child, I reasoned like a child. When I became a man, I put childish ways behind me.

12. Now we see but a poor reflection as in a mirror; then we shall see face to face. Now I know in part; then I shall know fully, even as I am fully known.

13. And now these three remain: faith, hope and love. But the greatest of these is love.

Rev. ஆன்றோ ஜெபஸ்

மைக்கேல் அசரியா தேர்வு பகுதி

Exam. Date 04-10-2026

LKG & UKG	மனப்பாட பகுதி	சங். 119 : 1–10
	வேத பகுதி	யோனா : 1– 4
I & II	மனப்பாட பகுதி	சங். 119 : 1 – 12
	வேத பகுதி	யோனா : 1 – 4
III & IV	மனப்பாட பகுதி	சங். 119 : 1 – 4
	வேத பகுதி	யோனா : 1 – 4
V & VI	மனப்பாட பகுதி	சங். 119 : 1 – 16
	வேத பகுதி	யோனா : 1 – 4 மாற்கு : 1 – 4
VII & VIII	மனப்பாட பகுதி	சங். 119 : 1 – 18
	வேத பகுதி	யோனா : 1 – 4 மாற்கு : 1 – 6

IX & X	மனப்பாட பகுதி	சங். 119 : 1 – 24
	வேத பகுதி	யோனா : 1 – 4 மாற்கு : 1 – 8
XI & XII	மனப்பாட பகுதி	சங். 119 : 1 – 30
	வேத பகுதி	யோனா : 1 – 4 மாற்கு : 1 – 10
Below 35	மனப்பாட பகுதி	சங். 119 : 1 – 32
	வேத பகுதி	யோனா மாற்கு
Above 35 to 60	வேத பகுதி	யோனா மாற்கு
Above 60	வேத பகுதி	யோனா மாற்கு

கர்த்தர் உன் ஆக்கினைகளை அகற்றி உன் சத்துருக்களை விலக்கினார்.

வேத வினா போட்டி விடைகள்
வேத பகுதி : **ஆமோஸ் & செப்பனியா**

I. குறுகிய விடையளிக்கவும் :

1. நான் யார் - எமோரியர்
அழித்தது - கனி & வேர் ஆமோஸ் 2 : 9 2

2. தேட வேண்டிய மூவர் 1) கர்த்தரை 2) நீதியை 3) மனத்தாழ்மையை
தேடவேண்டியவர்கள்
1) தேசத்திலுள்ள எல்லா சிறுமையானவர்கள்
2) கர்த்தருடைய நியாயத்தை நடப்பிக்கிறவர்கள்
விளைவு : கோபத்தின் நாளில் மறைக்கப்படுதல் செப். 2 : 3 3½

3. கோட்டானும், நாரையும் - 2 பறவைகள்
தங்கும் இடம்: அசிரியாவின் சிகரங்கள் மேல் or
நினிவேயின் சிகரங்கள் மேல் எப்பொழுது இரவில் செப். 2 : 13, 14 2

4. 4 வீடுகள் 1) மாரி காலத்து வீடு, 2) கோடை காலத்து வீடு, 2
3) யானை தந்தத்தால் செய்யப்பட்ட வீடு 4) பெரிய வீடு ஆமோஸ் 3 : 15

5. யாக்கோபு ஆமோ. 7 : 2 (or) 7 : 5 1

6. எதற்காக கர்த்தர் மனஸ்தாபப்பட்டார். 1
யாக்கோபு திரும்ப யாராலே எழுந்திருப்பான். அவன் சிறுத்துப் போனான் - என்பதற்காக
2 முறை வருகிறது ஆமோஸ் 7 : 2, 3; 7 : 5 - 6 1

7. வாரிக் கொள்ளப்படும் ஏழு
1. தேசத்தில் உண்டானதை எல்லாம் 2. மனுஷரையும்
3. மிருக ஜீவன்களையும் 4. ஆகாயத்துப் பறவைகளையும் 3½
5. சமுத்திரத்து மச்சங்களையும் 6. இடறுகிறதற்கேதுவான வைகளையும்
7. துன்மார்க்கரையும் செப். 1 : 2 - 3

8. தூக்கு நூல் ஆமோஸ் 7 : 8
பழுத்த பழங்களுள்ள கூடை ஆமோஸ் 8 : 2 1

9. தேசமெல்லாம் செப். 1 : 18
பூமியெல்லாம் செப். 3 : 8 1

10. மோளோகுடைய கூடாரத்தையும் நட்சத்திர ராசியாகிய சொரூபங்களின் சப்பரத்தையும் ஆமோஸ் 5 : 26, பு. ஏற். அப்போ. 7 : 43 2

இவ்விடத்தில் சமாதானத்தைக் கட்டளையிடுவேன் என்று சேனைகளின் கர்த்தர் உரைக்கிறார்.

II. நிரப்புக

10 X 1 = 10

1. இரைச்சலை ஆமோஸ் 5 : 23
2. வீண் பெருமையும் செப். 3 : 4
3. வாசற்படிகளில் செப். 2:14
4. பெத்தேலை ஆமோஸ் 5:5
5. பிராணனை ஆமோஸ் 2:15
6. மௌனமாயிருங்கள் செப். 1 : 7
7. பாவமுள்ள ஆமோஸ் 9 : 8
8. அநியாயக்காரனோ செப். 3:5
9. திறப்புகள், வெடிப்புகள் ஆமோஸ் 6:11

III. பொருத்துக.

10 X 1 = 10

வ.எண்	A	B	வசன ஆதாரம்
1.	கிரேத்தியா	சமுத்திரக் கரை குடிகள்	செப். 2:5
2	கிலேயாத்	இருப்புக் கருவி	ஆமோஸ் 1:3
3.	பதர்	நாள்	செப். 2:1
4.	ஆமாத்	பெரிய பட்டணம்	ஆமோஸ் 6:2
5.	அதிபதிகள்	கெர்ச்சிக்கிற சிங்கங்கள்	செப். 3:3
6.	சீரியா	சீர்	ஆமோஸ் 1:5; 9:7
7.	அஸ்கலோன்	வீடுகள்	செப். 2:7
8.	அமத்சியா	ஆசாரியன்	ஆமோஸ் 7:10
9.	ஆமோன்	யோசியா	செப். 1:1
10.	மோவாப்	கீரியோத்	ஆமோஸ் 2:2

மொத்தம் = 40

நான் உங்களோடே இருக்கிறேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

வேத வினா - போட்டி :

பிரிவு I - Porlion நெகேமியா, ஆதியாகமம், யோசுவா சங்கீதங்கள்

II - சாமுவேல் எண்ணாகமம்

1. சிறையிருப்பிலிருந்து வந்தவர்கள் தங்கிய இடம் பெண்யமீன் கோத்திரத்தார், யூதாகோத்திரத்தார் தங்கிய இடம்?
2. எந்த இடத்தில் யோவாப் 12000 பேரை வெட்டினான்?
3. சாலை போட பயன்படும் பொருள் கிடைக்கும் இடம்?
4. ஒரு அடையாளத்தைத் தனக்கென்று ஒரு ராஜா இந்த இடத்தில் நிறுத்தினான்? இதே இடத்தில் ஒருவன் ஆசீர்வதித்தான் மற்றவன் காணிக்கை கொடுத்தான் யார் யார் இதன் மறுபெயர் என்ன?
5. கர்த்தர் தமது சினத்தை விட்டு மாறினார்.

   இது கால்நடை தங்கும் இடம்

   இவள் அங்கே தன் இளமையில் பாடியது போல் பாடுவாள்
6. பழத்தின் நிமித்தம் பெயர் பெற்ற இடம்?
7. தேவனுடைய சந்நிதியில் காணப்படும் இவர்கள் கவலைகளை மாற்றும் இடம், விரைவாக மாற்றுவார்கள்

பிரிவு II - உன்னதப்பாட்டு

1. உன் கூந்தல் இந்த மலையின் மேல் மேயும் ஆட்டுமந்தையைப் போல் உள்ளது.

   இவ்விடத்திலுள்ள ஒரு விசேஷமான பொருள் என்ன (தீர்க்கதரிசனப் புத்தகம்)
2. உன் சிரசு இவ்வாறு இருக்கிறது.

   இங்கு நடந்த விசேஷ நிகழ்வைக் கூறு. (இராஜாக்களின் புத்தகம்)
3. என் நேசர் இங்கு முளைக்கின்ற மருதோன்றி பூங்கொத்து (தீர்க்கதரிசன புத்தகம்)
4. கொடு முடியிலிருந்து கீழேபார்.

   இதன் முக்கிய செய்தி என்ன? இங்கு வடியும் பனிபோல் இருப்பது எது? (சங்கீதம்)

   பிரிவு I ல் வேறு குறிப்புகள் வேறு புத்தகங்களிலும் உண்டு வசன ஆதாரம் தேவை.

உன் தேவனாகிய கர்த்தர் உன் நடுவில் இருக்கிறார்.

குறுக்கெழுத்து புதிர் விடைகள்

ஜனவரி - மார்ச் 2026

Reference : சங்கீதம் 1 - 5

(V Std. to XII Std.)

					8 நீ				6 பா	2 து
	10 ப	ய	3, 4 ப	க்	தி	யு	ள்	ள	வ	ன்
7 கா	ரு	ணி	ய	ம்					ம்	மா
	1 வே	த	ம்			5 க	ர்	த்	த	ர்
										க்
										க
				9 வீ	ம்	பு	க்	கா	ர	ர்

Across :-

1. **வேதம்** (சங். 1 : 2)
4. **பக்தியுள்ளவன்** (சங். 4 : 3)
5. **கர்த்தர்** (சங். 3 : 5)
7. **காருணியம் (சங். 5 : 12)**
9. **வீம்புக்காரர் (சங். 5 : 5)**
10. **பயபக்தி** (சங். 5 : 7)

Down:-

2. **துன்மார்க்கர் (சங். 3 : 7, 1 : 6)**
3. **பயம் (சங். 2 : 11)**
6. **பாவம் (சங். 4 : 4)**
8. **நீதி (சங். 4 : 5)**

பூமியிலுள்ள சகல ஜனங்களுக்குள்ளும் நான் உங்களைக் கீர்த்தியும் புகழ்ச்சியுமாக வைப்பேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

Crossword Puzzle

Reference : சங்கீதம் 6 - 10

(V Std. to XII Std.)



Name : ______________________________

Standard : ______________________________

Father's Name : ______________________________

தேவனாகிய கர்த்தர் அவர்களை விசாரித்து, அவர்கள் சிறையிருப்பைத் திருப்புவார்.

இடமிருந்து வலம் (Across) :

1. யார் மனந்திரும்பாவிட்டால் தேவன் பட்டயத்தைக் கருக்காக்குவார்?

7. எதை கர்த்தர் நியாயத்தீர்ப்புக்கு ஆயத்தம் பண்ணினார்.

8. தேவனை அசட்டைபண்ணுபவன், தேவனைத் தேடாமல் தேவன் இல்லை என்று நினைப்பவன், நான் யார்?

9. எதினிமித்தம் கர்த்தர் நம்மை இரட்சிப்பார்?

11. இங்கு யாரும் கர்த்தரைத் துதிப்பதில்லை.

12. திக்கற்ற பிள்ளைகளுக்கு கர்த்தர் யார்?

13. கர்த்தர் இரக்கம்பாராட்டும் வரைக்கும் வியாகுலப்படுவது எது?

14. தேவதூதரிலும் சற்று சிறியவனாக்கப்பட்டு மகிமையினாலும் கனத்தினாலும் முடிசூட்டப்பட்டவன். நான் யார்?

மேலிருந்து கீழ் (Down) :

2. சிங்கம்போல் ஆத்துமாவைப் பிடித்துக் கொண்டு போய் பீறுபவன் யார்?

3. பகைஞரை அடக்க எங்கள் வாயினால் பெலன் உண்டுபண்ணினார். நாங்கள் யார்?

4. துன்மார்க்கனின் நாவின்கீழ் உள்ளது இது.

5. நீதியுள்ள நியாதிபதியாகிய இவர் பாவியின்மேல் சினங் கொள்ளுகிறவர். இவர் யார்?

6. சதாகாலங்களுக்கும் ராஜா இவர். என் அழுகையின் சத்தத்தைக் கேட்டார். இவர் யார்?

10. தேவனை மறக்கிற எல்லா ஜாதிகளும் இங்கே தள்ளப்படுவார்கள்.

Dr. சோபியா ஜோனத்தான்

வண்ணம் தீட்டுதல்

(Below 5th Std)



Name : ______________________________ Std : ____________

Father's Name : ______________________________

கர்த்தர் என் கால்களை மான்கால்களைப் போலாக்கி, உயரமான ஸ்தலங்களில் என்னை நடக்கப்பண்ணுவார்.